# கொளாநல்லி குழாயர், கண்ணர் குல வரலாறு

துரன்.நல்.நடராசன்

பல்லவி பதிப்பகம்

இந்நூல் கொளாநல்லி அருள்மிகு பொன் குழலி அம்மன் ஆலய திருப்பணிக் குழுவினரின் நிதி உதவி பெற்று வெளியிடப் பெறுகிறது.

ALL RIGHTS RESERVED. No part of this Publication be imitated reproduced stored in a retrival system or transmitted in any form or by any means electronical. Mechanical, photocoping recording or otherwise without the prior written permission of Author, TURAN. NALL.NATARAJAN.

No:3


Price: Pages: IV + 60 = 64

**KOLHANALLI KUZHAAYAR KANNAR KULA VARALAARU** - The History of Kolanalli Kuzhayar Kannar lineage by TURAN. NALL. NATARAJAN(C) First Edition SEPTEMBER 1995 Published by Turan Nall Natarajan, **Pallavi Pathippagham**, uthandi palayam, Ganapathi Palayam (P.O) Periyar Dt., Pin-638 153. Printed by: Bharath Printograph, Sivakasi.

# பொருளடக்கம்


1. கொங்கு வேளாள கவுண்டர் ........ 1
2. கொங்கு நாடு ........ 13
3. பூந்துறை நாடு ........ 18
4. கொங்கு வேளாளர் குலங்கள் ........ 22
5. கண்ண குலம் ........ 28
6. கண்ண குலத்தார் காணி ........ 38
7. கொளா நல்லி கண்ண குலம் ........ 49
8. குழாயர் குலம் ........ 55

# ஆசிரியர் உரை



வரலாற்றுச் சிறப்பும் பெருமையும் மிக்க கொங்கு வேளாளர்களின் பண்பாடும் நாகரிகமும் மனிதகுல வரலாற்றில் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டியவை. அவை தமிழ் கூறும் நல்லுலகால் அறியப்பட வேண்டும். போற்றப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். இதன் வெளிப்பாடுதான் இந்நூல்.

தங்கள் குலத்தைப் பற்றியும் காணியைப் பற்றியும் குல தெய்வத்தைப் பற்றியும் உள்ள வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ளும் ஆர்வம் இளைய தலைமுறையினரிடம் வேகமாகப் பரவிவரும் இவ்வினிய வேளையிலே கொளாநல்லி குழாயர், கண்ணர் குல வரலாறு என்ற இவ்வரலாற்று சிறப்புமிக்க இந்நூல் வெளியாவதை கொங்கு இனம் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என யாம் நம்புகிறோம்.

இந்நூல் எழுதுவதற்கு எமக்கு கலங்கரை விளக்காய் இருந்து வழிகாட்டிய தொழிலதிபர். சி.மோகன சுந்தரன் (ஸ்ரீராமகிருஷ்ணா டிரேடிங் கார்ப்பரேஷன், ஈரோடு), அவர்களுக்கும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டுத்துறை தலைவர் புலவர்.செ.ராசு அவர்களுக்கும், குட்டப்பாளையம் எஸ்.பழனி குமார், வடுகனூர் கே.சின்னச்சாமி, ஈரோடு நந்தா ஆர்ட்ஸ் ராம்நந்த கோபால், குமாரசாமிபுரம் கே.என்.சுப்பிரமணியம் மற்றும் இந்நூல் வெளியாவதற்கு நிதிஉதவி நல்கிய அருள்மிகு பொன்குழலி அம்மன் ஆலய திருப்பணிக்குழு மற்றும் பல்வகையிலும் எமக்கு பேருதவி நல்கிய அனைத்து நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றியை காணிக்கையாக்கிக் கொள்கிறோம்.

இவண்,
தூரன். நல். நடராசன்,
பத்திரிக்கையாளர்.
உத்தண்டிபாளையம்,
கணபதி பாளையம் (அஞ்சல்)
பெரியார் - 638 153.

ஈரோடு,
1.9.1995.

# கொங்கு வேளாளக் கவுண்டர்

MADR

***சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் (குறள் 1031)***
***உழுவர் உலகத்தார்க்கு ஆணி ( குறள் 1032)***
***உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் (குறள் 1033)***

என்ற வான்புகழ் வள்ளுவனின் வாக்கிற்கு ஏற்ப, உலகம் இயங்க, உலக மக்கள் இன்புற்று வாழ, இன்றியமையாது தேவைப்படும் உழவுத் தொழிலை தமது வாழ்வின் இலட்சியமாய் கொண்டிருக்கும் இனம் **உழவர்** என்று அழைக்கப்படும் **கொங்கு வேளாளக்கவுண்டர்** இனம் ஆகும்.

இங்கு, கொங்கு வேளாளக் கவுண்டர் என்ற சொல்லை ஆராயுமிடத்து வேளாளர் என்னும் சொல் ஒரு பொதுச் சொல் ஆகும். அதாவது, வெள்ளத்தை தேக்கிப் பயிர் செய்வோர் **வேளாளர்** அல்லது **வெள்ளாளர்** ஆவர். இதன் பொது தன்மை கருதி பாண்டிய நாட்டில் ,

***" கள்ளர் மறவர் கனத்ததொரு அகம்படியர்***
***மெள்ள மெள்ள வந்து வேளாளர் ஆனார் கான் "***

*என்ற ஒரு பழம் பாடல் வழக்கில் நிலவுகிறது.*

உழவுத் தொழில் புரிவோர்க்கு வேளாளர் அல்லது வெள்ளாளர் என்ற பெயர் ஏற்பட்டமைக்கு பல்வேறு அறிஞர்களும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு உள்ளனர்.

## வேளாளர்

**நச்சினார்க்கினியர்**, " வேளாளர்" என்பதற்கு " வேள்" என்றும் "பட்ட உரிமையாள்பவர்" என்றும் அவர்கள் உழுதுண்பவர். உழுவித்துண்பவர் என இரு வகையினர் என்றும் கூறுகிறார்.

**டாக்டர் மு. ஆரோக்கிய சாமி** சங்க இலக்கியங்களில் வரும் வேள், வேளிர் என்ற பெயர்களிலிருந்து வேளாளர் என்ற பெயர் தோன்றியதாக கூறினார். **நாமிருக்கும் நாடு அல்லது தென்னிந்திய வரலாறு** என்ற தனது நூலில் வேளாளார் பற்றி அவர் கூறுவதாவது.

*"பெருமை வாய்ந்த வேளிர் குல மன்னரில் பலர் அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இக்காலத்தில் வேளாளர் என வழங்குபவர் என்பதை நாம் எழுதிய வெள்ளாற்று வெளியில் பழங்கால வரலாறு என்ற நூலில் விளக்கமாக காட்டியுள்ளோம்."*

டாக்டர். ஆர். நாகசாமி "வேள்" என்ற சொல்லிலிருந்து வேளாளர் என்ற பெயர் உருவாகியிருக்க வேண்டும் என்று கருதுகிறார். **வேள்** எனில் **மண்** என்பது பொருள். ( யாழ்பாணத் தமிழ் அகராதி தமிழ் லெக்சிகன்) மண்ணைக் கொண்டு தொழில் புரியும் குயவனுக்கு **வேட்கோ** எனப் பெயர் பல கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. வேள் என்பது மண்ணைக் குறிக்கும் என உறுதி செய்கின்றது. மண்ணை ஆள்பவர் என்னும் பொருளும் வேள் ஆளர் அல்லது வேளாளர் என வந்திருக்க கூடும். வேளாளர், வேளார் வேளிர் என்ற மூன்று இனத்தாரும் ஒரு குடியினராகவே கருதப்படுதல் உண்டு.

## வெள்ளாளர்

**டாக்டர். ஆர். கால்டுவெல்** தனது *HISTORY OF TINNELVELLY DT* என்ற நூலில் வெள்ளாளர் என்ற சொல் வெள்ளம் ஆளர் வெள்ளத்தை ஆள்பவர் என்ற பொருளில் தோன்றியது என்கிறார்.

**ஜே. எச். நெல்சன்** கூறுவது.

" The Tamil mode of Spelling the work Vellalan (வெள்ளாளன்) and as ( வெள்ளாண்மை ) is the work commonly used to express the act of cultivation ( Strictly rulling or managing irrigation) it is but natural to infer that the Vellalan means a cultivator or irrigator of rice field rather than a man of particular tribe or cummunity."

"வெள்ளாளன், வெள்ளாண்மை என்னும் பெயர்கள் உச்சரிப்பு வழக்கை கொண்டு அப்பெயர்கள் பொதுவாய் பயிர்த் தொழில் செய்தல் அல்லது பயிர்த்தொழில் செய்வித்தல், வெள்ளத்தை அடக்கி ஆள்தல் என்ற இரண்டு பொருள்களை உணர்த்தும். எனவே வெள்ளாளர் என்பதற்கு பயிர்த் தொழில் செய்பவர் அல்லது நெற்பயிர் விளைவிப்பவர் என்பதே சரியான பொருளாகும். இதை ஒரு குறிப்பிட்ட மரபு அல்லது குடிப்பெயராகக் கொள்வதற்கில் லை."

**டாக்டர். ஜி. ஒப்பர்ட்** வெள்ளாளன் என்ற சொல் ஆளுகிறவன் தலைவன் என்ற பொருளையே உணர்த்து வதாயுள்ளது என்று தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**டாக்டர். எச். ஏ. ஸ்டுவர்** கூறுவதாவது.

" The word Vellalan is derived from vellanmal ( Vellam-Water, Animal Management ) meaning Cultivation".

*( வெள்ளாளன் என்ற சொல் வெள்ளாண்மை வெள்ளம்-நீர்ப்பெருக்கு ஆண்மை-ஆள்வது அதாவது விவசாயம் பயிரிடுதல் என்ற பொருள் அடிப்படையில் பிறந்தது.)*

**பி.டி. சீனிவாச அய்யங்கார்** கூறுவதைக் காண்போம்.

"பயிர் வளர்வதற்கு நீர் இன்றியமையாதது. இதற்காக ஆறுகளில் வரும் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தி அடக்கி ஆள்பவர் என்ற பொருளில் **வெள்ளாளர்** என்ற பெயர் தோன்றியது. அதைப் போன்று ஆற்றுப் பாய்ச்சலுக்குப் புறம்பான நிலங்களில் பயிர் செய்வத ற்குத் தேவையான நீரை ஏரி குளங்களில் தேக்கி வாய்க்காலகள் மூலம் செய்வோர்களாகிய மேகத்தை நம்பி வாழ்பவர் அல்லது மேகத்தை ஆள்பவர் என்ற பொருளில் **காராளர்** என்ற பெயர் தோன்றியது."

**மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவணர்** கூறுவதாவது.

"வேளாளர் உழுதுண்பார்க்கு கருங்களமர், காராளர் என்ற பெயர்களும் உரியன. உழுவர், களமர், கடையர், வேளாளார் என்பன இரு சாராருக்கும் பொதுவாகும். ஆயினும் ஈற்றுப்பெயர் தவிர்த்த ஏனைய எல்லாம் உழுதுண்பார்க்கே சிறப்பாக வழங்கின. அவருக்கு மன்னர் என்ற பெயரும் உண்டு."

**டாக்டர் என் சுப்பிரமணிம்** கூறுவதாவது.

*"வெள்ளாளர் என்ற சொல் "வேள் பிரியப்படுதல்" என்ற சொல்லிருந்து பிறந்திருக்க வேண்டும். வேளில், வேட்கார் என்ற சொற்களும் அதிலிருந்து பிறந்தன."*

**எம் சீனிவாச அய்யங்கார்** கூறுவதாவது.

வெள்ளாளன் என்பதற்கு சாதாரணமாய் வெள்ளம் பெருக்கு, ஆளன் - ஆளுகிறவன், – நீரைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் பயிர்த்தொழில் செய்கிறவர் என்று ஒரு சாரார் பொருள் கொள்வர். வெள்ளாண்மை - பயிர் தொழில் செய்தல் என்ற பொருளில் இருந்து பிறந்ததாக பிறிதொரு சாரார் பொருள் கொ–ள்வர். ஆனால் இருசாராரும் கொள்ளும் பொருள் ஏற்புடையதன்று. இதற்கு சரியான வேர்ச்சொல் வெள்ளாண் என்பதே. இச்சொல் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. இச்சொல்லுக்கு நிகரான இன்னொரு சொல் வேள் - அதாவது போர்க்கடவுள் ஆகும். வேளிர் என்பது பண்டைத் தமிழகத்தின் குறுநில மன்னர் ஆவர் வேளக்காரன் - காற்படை வீரன் (இராசராஜ சோழன் காலக் கல் வெட்டுகளில் இப்பெயர் காணப்படுகிறது வேள் - உபகாரம் , வேள் - ஆண்மை , உண்மை வேள் - ஆளன் - பயிர் தொழில் செய்பவன் என்ற சொற்கள் காணப்படுகின்றன. இறுதியில் காணும் இரு சொற்களும் பழைய தமிழ் இலக்கியங்களில் இடம் பெறக் காணோம். ஆனால், மற்ற சொற்களின் வேர்ச்சொற்கள் போர்ச் செயலை உணர்ந்துவதாயுள்ளன. படை என்ற சொல் பட்டாளத்தையும் படைக் கருவிகளையும், உழவுக் கருவியாக ஏர்க் கலப்பையையும் உணர்த்தும். மற்ற கருவிகளிலிருந்து ஏர்தொழிலை வேறுபடுத்திக் காட்ட **உழுபடை** என்ற சொல் வழக்கில் உள்ளது. தற்காலம் பந்து நாயர், பள்ளர், தெலுங்கு வேளம்மா முதலிய விவசாயக் குடியினர் பண்டைய வேளாளர் போன்று போர்க்குணம் படைத்தவரேயாவர்.

***தற்காலத்தில் வேளாளர் இனத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பிரிவுகள் காணப்படுகின்றன. அவையாவன.***

1. *அச்சுக்கரை வேளாளர்*
2. *அரும்புக்கட்டி வேளாளர்*

3. அரும்பு கற்ற வேளாளர்
4. அகம்படிய வேளாளர்
5. அமுதிடுவார் வேளாளர்
6. ஆதி சைவ வேளாளர்
7. ஆரிய வேளாளர்
8. ஆறு நாட்டு வேளாளர்
9. ஆர்க்காட்டு வேளாளர்
10 ஆறு நாட்டு மொட்டை வேளாளர்
11. இந்து சிவ மத வேளாளர்
12. இசை வேளாளர்
13. இலை வேளாளர்
14. இளவாழை வேளாளர்
15. ஈச்சங்கொட்டை வேளாளர்
16. ஈச்ச மொட்டை வேளாளர்
17. ஈர்ங்கோலி வேளாளர்
18. ஊற்று வேளாளர்
19. ஊத்துநாட்டு வேளாளர்
20. எருது மாட்டு வேளாளர்
21. ஏழூர் நாட்டு வேளாளர்
22. ஏழுரை நாட்டு வேளாளர்
23. ஏழுகரை நாட்டு வேளாளர்
24. ஓ.பி.எஸ். வேளாளர்
25. ஒள்ளியூர் வேளாளர்
26. கருணிக வேளாளர்
27. கரையான் வேளாளர்
28. கரமாத்தி வேளாளர்
29. கன்னியாகுமரி வேளாளர்
30. கார்காத்த வேளாளர்
31. காராள வேளாளர்
32. காரைக்காட்டு வேளாளர்
33. கானாட்டு வேளாளர்
34. காணியாள வேளாளர்
35. கருத்துவ வேளாளர்
36. குக வேளாளர்
37. குறிஞ்சி வேளாளர்
38. குறும்ப வேளாளர்
39. குடிகார வேளாளர்.

40. கொடிக்கால் வேளாளர்
41. கொண்டல் கட்டி வேளாளர்
42. கொண்டைக்கட்டி வேளாளர்
43. கொந்தகை வேளாளர்
44. கொந்தல வேளாளர்
45. கொடுப்புழை வேளாளர்
46. கொங்கு வேளாளர்
47. கோனாட்டு வேளாளர்
48. கோட்டை வேளாளர்
49. கோட்டைப் பிள்ளை வேளாளர்
50. சங்கு வேளாளர்
51. சங்குதாள வேளாளர்
52. சவளை குல வேளாளர்
53. சாம்பிய நாட்டு வேளாளர்
54. சாம்ப வேளாளர்
55. சிலம்பணி வேளாளர்
56. சிந்துகுல வேளாளர்
57. சித்தக்காட்டு வேளாளர்
58. சிலம்புகார வேளாளர்
59. சிறுகுடி வேளாளர்
60. சீர் குடி வேளாளர்
61. சீந்த வேளாளர்
62. செம்பொன் வேளாளர்
63. செம்பை நாட்டு வேளாளர்
64. செந்தலை வேளாளர்
65. செம்பி வேளாளர்
66. சேனை குல வேளாளர்
67. சேர குல வேளாளர்
68. சைன குல வேளாளர்
69. சைவ குல வேளாளர்
70. சோழிய குல வேளாளர்
71. தவளை குல வேளாளர்
72. தவசிப் பிள்ளை வேளாளர்
73. தட்சன வேளாளர்
74. துளுவ வேளாளர்
75. தென் தலை வேளாளர்
76. தென் திசை வேளாளர்

77. தேவேந்திர வேளாளர்
78. தேசிய தேசி கார் ஓதுவார் வேளாளர்
79. தொண்டை மண்டல வேளாளர்
80. தொ. ம. முதன்மை வேளாளர்
81. தொண்டை மண்டல சைவ வேளாளர்
82. நற்குடி வேளாளர்
83. நரம்பு கட்டி வேளாளர்
84. நார் கட்டி வேளாளர்
85. நான் குடி வேளாளர்
86. நூலூர் வேளாளர்
87. நாஞ்சில் நாட்டு வேளாளர்
88. நாற்பத்திரண்டூர் வேளாளர்
89. நேமி நகர் வேளாளர்
90. நீர் பூசி வேளாளர்
91. பவள வேளாளர்
92. பணிக்க வேளாளர்
93. பாண்டிய வேளாளர்
94. பால வேளாளர்
95. 18 மந்தை 84 ஊர் சோழிய வேளாளர்
96. பொன்கரை வேளாளர்
97. பூக்கார வேளாளர்
98. பூந்த மல்லி வேளாளர்
99. பொடிக்கார வேளாளர்
100. பைரவ வேளாளர்
101. மங்கல நாட்டு வேளாளர்
102. மலை காணும் வேளாளர்
103. முதடுத்த நாட்டு வேளாளர்
104. மூக்குல வேளாளர்
105. மூனூர் வேளாளர்
106. 3 மந்தை 84 ஊர் வேளாளர்
107. ரத்தினகிரி வேளாளர்
108. வடதலை வேளாளர்
109. வன்னிய வேளாளர்
110. வடக்குவாடி வேளாளர்
111. வீரக்கொடி வேளாளர்
112. வெள்ளான் செட்டி வேளாளர்
113. வோம்பத்தூர் வேளாளர்

என்பவை வேளாளர் இன பிரிவுகளில் ஒரு பகுதியாகும்.

அத்தகைய வேளாளர்களில் ஒரு பிரிவினர் தொண்டை நாட்டிலிருந்து சோழநாடு வழியாகக் கொங்கு நாட்டில் குடியேறினர். இவர்களே கொங்கு வேளாளக் கவுண்டர் என அழைக்கப்பெறுகின்றனர். கொங்கு வேளாளர்களின் குடியேற்றத்தைப் பட்டயங்கள் பலவற்றின் மூலம் அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக, பெரிய குலத்து தலைவர்களான வேணாடுடையார் பட்டயம் கீழ் வருமாறு கூறுகிறது.

*"ரிஷிபகிரிச் சோழன் மகளை*
*சேரமான் பெருமான்*
*பாணிக் கிரகனும் பண்ணிக் கொண்டே*
*படியினாலே சோழ ராசாவின் மகள் தனக்குசீதனம்*
*தன் தோப்பனாரைக்*
*கேட்டது வென்ன வென்றால் யெனக்கு*
*சிறிது வேளாளர் குடி வேணு மென்று கேட்க நாற்பத்*
*தெண்ணாயிரம் குடி சீதனம் கொடுத்த படியினாலே*
*சேரமான் பெருமாள் கொங்கு மண்டலத்துக்கு*
*கொங்கு வேளாளர் என்ற பேரும் கொடுத்து*
*கொங்கு மண்டலத்துக்கு அழைத்து வந்தர்*
*பேரில் யிருந்த யெண்ணாயிரம் குடியும் கொங்கு*
*மண்டலம் இருளுறைந்த காண்டாவனம் எல்லாம்*
*வெட்டி கிராமம் உண்டு பண்ணி."*

என்பது பட்டயப் பகுதி ஆகும். இவ்வாறே காங்கேயம் பல்லவராயர் ஊத்துக்குளி வானவராயர் வம்சாவழிகளும் மற்றும் இது சம்பந்தமாகக் கிடைததுள்ள பிற பட்டயங்களும் இலக்கியங்களும் கொங்கு வேளாளரின் மேற்கண்ட குடியேற்றத்தைத் தெரிவிக்கின்றன. எடுத்துக்காட்டாக, **அலகுமலைக் குறவஞ்சி** என்ற இலக்கியம் வேளாளர் குடியேற்றம் பற்றிப் பின் வருமாறு தெரிவிக்கின்றது.

"திக்கெலா மதிக்கும் சேரமான் பெருமான்
குருத்தணி சோழன் குறைவிலா தின்ற
உருத்திர மணியின் உடனக மகிழ்ந்து
மணம் புரிந் துலகில் வாழ்ந்திடும் நாளில்
குணமுடன் மகட்கு குருத்தணி சோழன்
சிதன வரிசை சிலபொரு ளுதவும்
போதினில் மகளும் பொருந்தியுள் மகிழ்ந்து
தந்தை தன்னுடனே சாற்றிய வசனம்
நந்தலில் லாத நாற்பத் தெண்ணாயிரம்
நற்குலத் தாரில் நாலிரு ஆயிரம்
நிற்கிரி கடனே நீடுடி காலம்
மதியுடன் எங்கள் மன்பசைச் சுமுகராய்
இதமுடன் இருக்க சுகுவீர் என
கூறவும் மகிழ்ந்து குருத்தணிச் சோழன்
சேரமா னுடனே செப்புவர் சிறப்பாய்
மகளுறை தவறா வாய்மையால் யானும்
வகையுடன் வேளாள் மரபுளோர் அனுப்பில்
உங்களோ டொப்ப வுயர்ச்சியாய் பார்க்கில்
அங்குயான் அனுப்ப அகம்சம் மதிப்பேன்
என்றவர் சொல்லவே சேர மானும்
நன்றவர் நமது நாடாதி பதியாய்
வரிசை மெய்ப் புகழுடன் வழங்குவே னெனவும்
சரிசரி யெனவே தரணி பாலகரில்
கன்னன் ஆனங்கூர் காணி முத்தையனை
மன்னவர் சபையில் வரவழைத் தேதான்
எண்ணா யிரங்கோத் திரத்துளோர்க் கரசன்
நன்னாகக் கொங்கு நாடதை விளக்கம்
செய்து தானிருப்பீர் சென்மென அனுப்ப
உய்யவே சேரனுலகுக்கு வந்தார்."

இந்த வகையில் கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டில் குடியேறிய காலம் சங்க காலம் எனக் கருதப்படுகிறது.

## கவுண்டர்கள்

கொங்கு வேளாளர்கள் பொதுவாக **கவுண்டர்கள்** என அழைக்கப் பெறுகின்றனர். இத்தகைய கவுண்டர் இனத்திலும் சுமார் முப்பத்து இரண்டு சிறு பிரிவுகள் காணப்படுகின்றன. அவை

1. வேளாளக் கவுண்டர்
2. நாட்டுக் கவுண்டர்
3. நரம்பு கட்டி கவுண்டர்
4. திருமுடி வெள்ளாளக் கவுண்டர்
5. தொண்டுக் கவுண்டர்
6. பாலக் கவுண்டர்
7. பூசாரிக் கவுண்டர்
8. அனுப்பக் கவுண்டர்
9. குறும்பக் கவுண்டர்
10. செந்தலைக் கவுண்டர்
11. படைத்தலைக் கவுண்டர்
12. பவளக்கட்டி வெள்ளாளக் கவுண்டர்
13. பாலவெள்ளாளக் கவுண்டர்
14. சங்கு வெள்ளாளக் கவுண்டர்
15. ரத்தினகிரி கவுண்டர்
16. வெள்ளிக்கை கவுண்டர்
17. ஆற்றங்கரைக் கவுண்டர்
18. மலையடிக் கவுண்டர்
19. தொள்ளக்காதுக் கவுண்டர்
20. முடவாண்டிக் கவுண்டர்
21. இளங்கன்னக் கவுண்டர்
22. மலையாளக் கவுண்டர்
23. ஊராளிக் கவுண்டர்
24. மன்னாடிக் கவுண்டர்
25. மொட்டைக கவுண்டர்
26. வீரகோடி வெள்ளாளக் கவுண்டர்
27. முதலியார் கவுண்டர்
28. செட்டியார் கவுண்டர்
29. கல்வேலி கவுண்டர்
30. காவாலி கவுண்டர்
31. மூன்றூர் கவுண்டர்
32. காரைகாட்டு வேளாள கவுண்டர்

கவுண்டர் என்ற சொல் **கமீண்டன்** என்ற பெயரிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது.

கா - என்னும் நிலப்பரப்புக் கானகத்தை அழித்து மேடு திருத்தி மேழிச் செல்வத்தை உண்டாக்கியதால் காமீண்டார் அதாவது கானகத்தைப் பயிர் நிலக் காடாக்கினார். பின்பு இது கல்வெட்டுகளில் காமிண்டன் என்பதாகப் பொறிக்கப்பட்டது.

வேணாட்டுப் பகுதியிலும் கொங்கு நாட்டிலும் தகடூர் நாட்டிலும் காணப்படும் கல்வெட்டுகளில் காமிண்டன் என்ற சொல் பரவலாக காணப்படுகிறது. பின்பு திரிந்து இச்சொல் கவுண்டன் என்று வழங்கப்படலாயிற்று.

கி.மு. 4 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 10 ஆம் நூற்றாண்டுகள் வரை தமிழகத்தை ஆட்சி செய்த களப்பிரர்களான கண்ணரத் தேவன் வம்சவளியினர் ஆட்சிக்காலத்தில் **ஊர்த்** தலைவர்களாக நியமனம் செய்விக்கப்பட்டிருந்த கொங்கு வேளாளர்கள் **க உண்டர்** என அழைக்கப்பெற்றனர். கன்னட மொழியில் **க** என்றால் **ஊர்** என்றும் **உண்டர்** என்றால் **தலைவர்** என்றும் பொருள்படும் க உன்டர் என்ற அச்சொல் பிற்காலத்தில் **கவுடர்** என மருவி தற்போது **கவுண்டர்** என வழங்கப் பெறுகிறது என்று கொங்கு வேளாளர்களுக்கு கவுண்டர் என்ற பெயர் ஏற்பட்டது குறித்து வரலாற்று ஆய்வாளர்கள் சிலர் இவ்வாறு தெரிவிக்கின்றனர்.

கொங்கு வேளாளர் தோற்றம் பற்றிய வேளாண் புராணத்தை அழகிய கவிதை வடிவத்தில் வீராட்சிமங்கலம் கந்தசாமி கவிராயர் அவர்கள் ஆக்கித்தந்துள்ளார். வேளான் தோற்றம் பற்றிய புராண ஐதிகங்களுடன் விளக்கமாகக் கூறப்பட்டுள்ள அந்நூலுக்கு கோவை விளாங்குறிச்சி நா. மருதாசலக் கவுண்டர் அவர்கள் உரைநடை அளித்துள்ளார். அந்நூல் வேளாளர் தோற்றம் பற்றி கீழ்வருமாறு கூறுகிறது.

கைலாயத்தில் பார்வதி தேவியுடன் சிவபெருமான் வீற்றிருக்கும் போது நான்முகனாகிய பிரமன் அங்கு வந்து சிவபெருமானால் உலகில் படைக்கப்பட்ட இயற்கை வசதிகளை யாவும் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என முறையிட்டான். சிவபெருமான் நான்முகனிடம் திருமாலைச் சென்று பார்க்குமாறு பணித்தார்

திருமாலிடம் சென்று நான்முகன் மேற்கண்டவாறு முறையிடும் போது போதாயன முனிவர் அங்கு வந்தார். போதாயன முனிவரைத் திருமால் நான்முகனுக்கு அறிமுகம் செய்து வைத்து அவரையே வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

வேளாண்மை செய்யத் தெரியாமல் உணவைப் படைக்கத் தெரியாமல் உண்ணத் தெரியாமல் இருந்த இவ்வுலகிற்கு கங்கைத் தாயின் அருகேயுள்ள திருவேணி சங்கமத்திலிருந்து மரபாளன் ஒருவனை உற்பத்தி செய்து அவனுக்கு சகல செய்திகளையும் கற்பிக்குமாறு போதாயனருக்கு திருமால் ஆணையிட்டார். கங்காதேவியின் சன்னிதானத்தில் வணங்கி மரபாளனைப் பெற்று தன்னோடு இந்திரலோகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று போதாயன முனிவர் வேண்டினார்.

தான் பெற்ற மரபாளனை இரு கைகளிலும் பரிந்தெடுத்து உச்சி மோந்து ஆனந்த முத்தங்கள் தந்து பொன்னுலகு சென்று சிறப்பெல்லாம் பெற்று போதாயருடன் மண்ணுலகு செல்க மகனே எனறு காங்காதேவி அனுப்பி வைத்தாள். இந்திரன் எல்லா இன்பங்களையும் குறைவறப் பெற்றிடுக என மரபாளனை வாழ்த்தினார்.

இந்திரன் மரபாளனை அரியாசனத்தில் இருக்கச் செய்து பார் முழுவதும் ஏர் முனையைத் தான் நம்பியுள்ளது சீரைத் தேடின் ஏரைத் தேடு என்கிறார்கள். சங்க கால பிணிகளிலும் தலை சிறந்த பசிப்பிணியை போக்க உழவுத் தொழில் இல்லாமல் உலகில் என்னதான் நடக்கும் இதற்கு இணையான தொழில் ஏதுமில்லை என்றனர்.

இந்திரனும் குபேரனும். இவர்களின் பெண் மக்களை மணந்த மரபாளன் (வேளாளன்) பூமிக்கு வந்து பயிர்த் தொழில் செய்ய முற்பட்டான். கங்கையின் அருளால் தோன்றிய வேளாளர் **கங்கா குலத்தினர் கங்கை மைந்தர்** என அழைக்கப்பட்டனர் என் அறிகிறோம்.

# கொங்கு நாடு

கொங்கு நாடு தமிழகத்தின் பண்டைய அரசியல் பிரிவுகளான சேர நாடு சோழநாடு மற்றும் பாண்டிய நாடுகளைப் போன்றே தனி நாடாகும். அது தனக்கென்று உரிய கலை இலக்கிய வரலாற்றுப் பண்பாட்டை கொண்டிருந்தது என்பது இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகளின் மூலம் தெரிய வருகின்றது.

கொங்கு நாட்டைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களிலும் கொங்கு நாட்டில் தோன்றிய தனிப்பாடல்களிலும் இங்கு கிடைத்துள்ள கல்வெட்டுக்களிலும் நிறையக் காணக் கிடைக்கின்றன. கொங்கு நாடு என்பது தற்போதைய அரசியல் பிரிவுகளின்படி நீலகிரி, கோவை, பெரியார், சேலம், தர்மபுரி மாவட்டங்களின் பகுதிகளும் திருச்சி மாவட்டத்தின் கரூர் குளித்தலைப் பகுதிகளும் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தின் பழநிப் பகுதியும் ஆகும்.

*'வடக்கு பெரும்பாலை வைகாவூர் தெற்கு*
*குடக்குப் பொருப்பு வெள்ளிக்குன்று கிடக்கும்*
*களித்தண்டலை மேவும் காவிரிசூர் நாடு*
*குளித்தண்டலை யளவு கொங்கு'*

என்பது ஒரு தனிப்பாடல். இதன் மூலம் கொங்கு நாட்டின் வடக்கு எல்லை பெரும்பாலை என்பதும், தெற்கு எல்லை பழனிமலை என்பதும் மேற்கு எல்லை வெள்ளியங்கிரி என்பதும் கிழக்கு எல்லை குளித்தலை என்பதும் தெரிய வருகிறது.

பண்டைக்காலம் முதற்கொண்டு கொங்கு நாடு ஒரு தனி நாடாகவே கருதப்பெற்று வந்துள்ளதை சங்க கால இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

*'கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே (புறம் 373)*
*ஆகெழு கொங்கர் நாடு ( பதிற்றுப் பத்து 22 ) '*

என்ற அடிகளில் கொங்குநாடு தனிநாடாகக் கருதப்பெற்று வந்ததை அறியலாம்.

மேலும், தொண்டை நாடு கொங்குநாடு ஆகியவற்றைச் சேர்த்து தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து அணியிலக்கன நூலில் மிகப் பழமையான மேற்கோள் பாடல் ஒன்று 'வியன் தமிழ் நாடு ஐந்து' என்று கூறுகின்றது.

***'நறவேந்து நங்கை நலங்கவர்ந்து நல்கா***
***மறவேந்தன் வஞ்சியான் அல்லன் துலையின்***
***விளங்காமை நின்ற வியன் தமிழ்நாடு ஐந்தின்***
***குலங்காவல் கொண்டொழுகும் கோ.'***

என்பதே அப்பாடலாகும்.

கொங்கு நாட்டு மக்கள் கொங்கர் என அழைக்கப்பட்டனர் என்பதை

*'கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்*
*வெண்கோட்டு யானைபோ ஓர் கிழவன் பழையன்'*
*(நற்றிணை 10)*
*' ஒளிறுவாள் கொங்கர் '* *(குறுந்தொகை 383 )*
*'கொங்கர் ஆபரந்தன்ன '* *(பதிற்றுப்பத்து 77)*
*'கொங்கர் படுமணி ஆயம்'*
*'நீர்க்கு நிமிர்ந்து செல்லும் சேதா'* *(அகநானூறு)*
*'வாடாப் பூவின் கொங்கர் ஒட்டி'* *(அகம் 253)*
*'கொங்கர் மணி அரையாத்து*
*மறுகின் ஆடும் உள்ளி விழவு '* *(அகம் 368 )*

என்ற அடிகளின் வாயிலாக அறியலாம்.

சோழ மன்னனின் அமைச்சராக இருந்து வந்த சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த பெரிய புராணத்தில் கொங்கு நாட்டிலிருந்து சமய அடியார்கள் சேர நாடு நோக்கிச் சென்றதை,

***"கொங்கு நாடு நடந்து போய்க்***
***குலவு மலை நாட் டெல்லை யுற***
***கொன்னா ரயில்வேன் மறவர் பயில்***
***கொங்கர் நாடு கடந்தருளி"***

என்று குறிப்பிடுகிறார்.

"**மீகொங்கில் அணி காஞ்சிவாய்**
**பேரூரர் பெருமானை**"

என்று குறிப்பிடுவதிலிருந்தும்

"**கொங்கில் குறும்பில் குரக்கு களியாய்.**"

என்று ஊர்த்தொகை குறிப்பிடுவதிலிருந்தும் கொங்கு நாடு தனி நாடு என்றே தெரிய வருகிறது.

கொங்கு நாட்டை சங்க காலத்தில் ஆட்சி செய்து வந்த சிற்றரசர்கள் சங்க இலக்கியங்களில் அத்தி, அதியமான், ஆய், ஈர்ந்தூன், கிழான், ஏற்றை, ஓரி, கடிய நெடு, தோயன், மாறன், கட்டி, வேட்டுவன், கொன்கனாங்கிழான், தாமான், தோன்றித்தோன், குமணன், பழையன், நன்னன், கொடுமுடி, பேகன், புன்றுரை, விச்சிக்கோ என அழைக்கப் பெறுகின்றனர்.

சிலப்பதிகாரம் சேர சோழ பாண்டிய மண்டலங்களுடன் கொங்கு மண்டலம் என்று ஒரு மண்டலம் இருந்ததாகவும் அம்மண்டலத்தின் அரசர் பெயர் இளங்கோசர் என்றும் சிலப்பதிகார கதை நடந்த காலத்தில் கண்ணகிக்கு சிலை வடித்து திருவிழா நடத்திய மூவேந்தர்களுடன் கொங்கு இளங்கோசரும் அவ்விழாவைக் கொண்டாடினார் என்றும் கூறுகிறது.

சிலப்பதிகாரக் கதை நடந்த இக்காலத்தில் கொங்கு நாட்டை ஆட்சி செய்த அரசர்கள் கோசர்கள் ஆவர். கோசர்களுக்குப் பிறகு இரட்டர்களும் கங்கர்களும் ஆட்சி செய்தனர் என்பதை **கொங்கு தேச ராசாக்கள்** என்ற நூல் விரிவாக எடுத்துரைக்கின்றது.

கங்கர்கள் ஆட்சி காலத்தில் சோழர்கள் கொங்கு நாட்டை வென்று அதனைச் சோழ மண்டலத்துடன் இணைத்துள்ளனர். நிர்வாக வசதிக்காக கொங்கு நாட்டைத் தனி மகாணமாக்கிக் கொண்டு இதனை ஆட்சி செய்ய தனிப் பிரதிநிதிகளை நியமித்திருந்தனர்.

சிறிது காலத்துக்குப் பிறகு அப்பிரதிநிதிகள் சுயேட்சை அதிகாரம் பூண்டு அரசாள ஆரம்பித்தார்கள். அவர்கள் **கொங்கு சோழர்கள்** என அழைக்கப்பட்டனர். கொங்கு நாடு பல்வேறு கால கட்டங்களிலும் பல்வேறு அரசியல் பிரிவுகளைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. கொங்குநாடு சிறப் புற்றிருந்த காலமாகிய கொங்குச் சோழருடைய ஆட்சிக்காலத்தில் அந்நாடு சில குறிப்பிட்ட அரசியல் பிரிவுகளைக் கொள்ள ஆரம்பித்தது. அரசியல் ஒழுங்கும் நிலைமையும் பெறத் தொடங்குகையில் அதனுடைய பிரிவுகளும் நிலைபெற தொர்டங்கின. பிரிவுகளுக்குப் பெயர்களும் ஏற்பட்டன. அவைகளுடைய எல்லைகளும் ஒழுங்கு பெற்றன.

அவ்வகையில் கொர்ங்கு நாட்டின் அரசியல் பிரிவுகள் 24 ஆகும். அவை ,

| | |
|---|---|
| 1. பூந்துறை நாடு | 2. தென்கரை நாடு |
| 3. காங்கேய நாடு | 4. பொன்கலூர் நாடு |
| 5. ஆறை நாடு | 6. வாரக்க நாடு |
| 7. திருவாவினன் குடி நாடு | 8. மணநாடு |
| 9. தலையநாடு | 10. தட்டைய நாடு |
| 11. பூவாணிய நாடு | 12. அரையநாடு |
| 13. ஒடுவங்கநாடு | 14. வடகரைநாடு |
| 15. கிழங்கு நாடு | 16. நல்லுருக்கா நாடு |
| 17. வாழவந்திநாடு | 18. அண்டை நாடு |
| 19. வெங்கல நாடு | 20. காவடிக்கா நாடு |
| 21. ஆனைமலை நாடு | 22. ராசிபுர நாடு |
| 23. காஞ்சிக்கோயில் நாடு | 24. குறுப்பு நாடு |

என்பதாகும்.

பழைய 24 கொங்கு நாடுகளும் கிழ்வரும் தற்போதைய அரசியல் பிரிவுகளின் படி கிழ்வரும் பெயர்களில் வழங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | பூந்துறை நாடு – | ஈரோடு, திருச்செங்கோடு வட்டங்கள் |
| 2. | தென்கரைநாடு – | தாராபுரம் , கரூர் வட்டங்கள் |

3. காங்கேய நாடு - தாராபுரம் , காங்கேயம் வட்டங்கள்

4. பொன்கலூர் நாடு- பல்லடம் , தாராபுரம் வட்டங்கள்

5. ஆறைநாடு - கோவை , அவிநாசி வட்டங்கள்

6. வாரக்கநாடு - பல்லடம் , பொள்ளாச்சி வட்டங்கள்

7. திருவாவினன்குடி - பழனி , உடுமலைப்பேட்டை வட்டங்கள்

8. மண நாடு - கரூர் வட்டம் (தென் மேற்குப் பாகம்)

9. தலையூர் நாடு - கரூர் வட்டம் (தென்மேற்கு பாகங்கள்)

10. தட்டயூர் நாடு - குளித்தலை வட்டம்

11. பூவாணிய நாடு - ஓமலூர் , தர்மபுரி வட்டங்கள்

12. அரைய நாடு - ஈரோடு ,நாமக்கல் வட்டங்கள்

13. ஒடுவங்க நாடு - கோபி வட்டம்

14. வடகரை நாடு - பவானி வட்டம்

15. கிழங்கு நாடு - கரூர் வட்டம்

16. நல்லுருக்கா நாடு - உடுமலைப்பேட்டை வட்டம்

17. வாழவந்தி நாடு - நாமக்கல் வட்டம் (வடக்குப் பாகம்)

18. அண்ட நாடு - பழனி வட்டம்

19. வெங்கல நாடு - கரூர் வட்டம்

20. காவடிக்கா நாடு - பொள்ளாச்சி வட்டம் ( கிழக்குப்பாகம்)

21. ஆனைமலை நாடு - பொள்ளாச்சி வட்டம் (தென்மேற்கு பாகம்)

22. ராசிபுர நாடு - சேலம் ராசிபுரம் வட்டங்கள்

23. காஞ்சிக் கோயில் நாடு - கோபி , பவானி , ஈரோடு வட்டங்கள்

24. குறுப்பு நாடு - ஈரோடு வட்டம் ( மேற்குப் பாகம் )

# பூந்துறை நாடு

கொங்கு நாட்டின் ஒவ்வொரு உ-ரும் ஏன் ஒவ்வொரு ஊர்ப் பெயரும வரலாற்று செய்திகளை தன்னகத்தே கொண்டுள்ளன. கொங்கு எனனும நாட்டின் பெயரே ஆராய்ச்சிக்குரியதாகும். **கொங்கு** என்றால் **தேன்** என்று ஒரு பொருள் உண்டு. இயற்கை வளம் மி நத கொங்கு நாட்டில் தேன் நிறைந்திருந்ததால் அதற்கு ெ ாஙகர் நாடு என்ற பெயர் ஏற்பட்டு பின்னர் அப்பெயர் மருவி கொங்கு நாடு என ஆகியிருக்கலாம் என்கின்றனர்.

இருபத்து நான்கு நாடுகளைக் கொண்ட கொங்கு நாட்டில் பூ துறை நாடே முதலில் வைத்து எண்ணப்படுகின்றது.. சோழநாட்டில் ஆளும் அரசோடு முரண்பட்ட வேளாளர்கள் காவிரிக் கரையின் வழியே சோழ நாட்டிலிருந்து புறப்பட்டு கொங்கு நாட்டிற்குள் முதன் முதலில் புகுந்து உறைந்த நாடு பூந்துறை எனப் பெயர் பெற்றது என்பது வரலாற்று ஆசிரியர் அரங்கசாமியின் கூற்றாகும். புட்பவனங்கள் நிறைந்த நாடு என்பதால் பூந்துறை என்ற கருத்தும் வழக்கில் உண்டு.

மேலும், சங்க காலத்தில் **புன்றுரை** என்ற வேளிர் தலைவனொருவன் கொங்கு நாட்டில் வாழ்ந்ததாகவும் அப்புன்றுரை என்ற தலைவன் வாழ்ந்த ஊர் அவன் பெயராலேயே புன்றுரை என வழங்கி நாளடைவில் அப்பெயர் **பூந்துறை** என்று மருவியது என்றும் பூந்துறை என்பதே கொங்கு நாட்டு வேளிர் தலைவன் பெயர். அப்பூந்துறை என்றும் பெயரே புன்றுரை என்று தவறாக இலக்கியத்தில் எழுதப்பட்டு விட்டது என்றும் உமையின் தவத்தைப் போற்றி அருள வந்த சிவ பெருமானின் திருமேனி பூ ப... மாகத் தோன்றியதால் அவ்விடத்திற்கு புட்பவனம் என்றும் இறைவனுக்கு புட்பவன நாதன் என்றும் பெயராகி நாளடைவில் அப்பெயரே ஊருக்கு பெயராயிற்று என்றும் புகழ்மிக்க பூந்துறைக்கு இப்பெயர் வந்தமைக்கு பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன.

***" பொன்னி நதி வாணிநதி காஞ்சி நதி***
***சூழ்கின்ற பூந்துறை நாடே"***

என்ற பாடல் பூந்துறை நாட்டின் பரப்பையும் எல்லையையும் குறிக்கின்றது. பூந்துறை நாடு மேல்கரை பூந்துறை நாடு என்றும் கிழ்கரைப் பூந்துறை நாடு என்றும் இரண்டாகப் பிரிக்கப்படிருந்தது.

மேல்கரைப் பூந்துறை நாட்டிற்கு கிழக்கில் காவிரி ஆறும் மேற்கில் சென்னிமலையின் வடக்கில் வாணி எனப்படும் பவானி நதியும் தெற்கில் காஞ்சி எனப்படும் நொய்யல் நதியும் எல்லைகளாகும். அதாவது தற்போதைய அரசியல் பிரிவுகளின் படி ஈரோடு வட்டத்தின் கிழக்குப்பாகம் மேல்கரைப் பூந்துறை நாடு என்பதும், திருச்சேங்கோடு வட்டம் கிழ்கரை பூந்துறை நாடு என்பதும் ஆகும்.

பூந்துறை நாடு **ஏழுகரை நாடு** என்றும் வழங்கப்பட்டது என்பதை **எழுகரை பூந்துறை** நாடு என்ற கல்வெட்டுச் செய்தியிலிருந்து அறியலாம். கரை என்றால் எல்லை என்று பொருள் படும். எழுகரை நாடு என்பதற்கு ஏழு நாடுகளைக் தன்னகத்தே கொண்டுள்ள நாடு என்று பொருள்படும். பூந்துறை நாடு , தூழுர் நாடு, பூவாணிய நாடு, சேல நாடு, ராசிபுர நாடு, அரைய நாடு மற்றும் பருத்திப்பள்ளி நாடு என்பவையே அவைகளாகும்.

மேல்கரைப் பூந்துறை நாடு 32 ஊர்களைத் தன்னக்ததே கொண்டது. இவை மிகவும் தொன்மையானவை. அவை

பூந்துறை, அறச்சலூர், வெள்ளோடு, விளக்கேத்தி, நசியனூர் சத்தியமங்கலம், எழுமாத்தூர், சேமூர், பிடாரியூர், மங்கலம், ஈங்கூர், வீரகநல்லூர், பெருந்துறை, ஈரோடு, சாத்தம்பூர், பேரோடு, காளமங்கலம், சித்தோடு, குழாநிலை, திண்டல் புதூர், கிளாம்பாடி, இலவமலை, மொடக்குறிச்சி, திருவாச்சி அனுமன்பள்ளி, பனயம் பள்ளி, பழமங்கலம், குலவிளக்கு, முருங்கைத்தொழு, காகம், ஈஞ்சம்பள்ளி என்பனவாகும்.

ஊர்த்தொகை பாடல் ஒன்று 32 ஊர்களையும் இவ்வாறு தொகுத்துக் கூறுகிறது.

*ந்துறைசை வெள்ளோடு நசியனூர் எழுமாதை*
*புகழ்சேர் பிடாரி நகரம்*
*பூங்கமழும் சங்கிர் பெருந்துறை சாத்தனூர்*
*பொன்காள மங்கலமதும்.*
*ஆய்ந்தமிழ் கூறும் குழாநிலை கிழாம்பாடி*
*ஆண்மைகொள் மொடக்குறிச்சி*
*அனுமநகர் பழமங்கை குல விளக்கு காகம்*
*அறச்சலூர் விளக்கேத்தியும்*
*வேந்தர்மகிழ் ஈஞ்சநகர் சத்தியமங் கலமதும்*
*மிக்கசே மூர்மங்கலம்*
*வீரநகர் ஈரோடு பேரோடு சித்தோடு*
*மிக்கான திண்டல்புதூர்*
*சேர்ந்து மழை பெய்திடும் இலவமலை திருவாச்சி*
*திகழ்பனசை ஓடா நிலை*
*தென்முருங் கைத் தொழுவு முப்பத்தி ரண்டூர்*
*சிறந்த பூந் துறைசை நாடே."*

என்பதே அப்பாடலாகும்.

பூந்துறை, வெள்ளோடு, நசியனூர், எழுமாத்தூர், ஆகிய நான்கு ஊர்களும் பூந்துறை நாட்டிற்கு முறையே முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தலை நகரங்களாகும்.

*"நற்கா விரிக்குமேல் கரைதனில் பூந்துறைசை*
*நனிர் கொண்ட வெள்ளோடையூர்*
*நசியனூர் எழுமாதை எனுமூயர் புகழ் பெரிய*
*நகரமொடு நான்கதாக."*

என்பது சென்னி மலை ஆண்டவர் பிள்ளைத் தமிழ் ஆகும்.

32 ஊறுப்பினர்கள் கொண்ட பூந்துறை நாட்டுச் சபைக்கு 10 உறுப்பினர்கள். வெள்ளோடு, நசியனூர், எழுமாத்தூர்க்கு முறையே 8, 6, 4 உறுப்பினர்கள், இவை நீங்கலாக ஏனைய 28 ஊர்களுக்குத் தலா ஒவ்வொரு உறுப்பினர்கள் ஆக மொத்தம் 56 உறுப்பினர்கள் கொண்டதுதான் பூந்துறை நாட்டுச் சபையாகும்.

பூந்துறை நாட்டு நிர்வாகத்திற்காகவும் நீதி பரிபாலனம் செய்யவும் ஆலயங்களுக்கு கொடைகள் அளிக்கவும் அளிக்கப்பட்ட கொடையின் பயன்கள் தவறாது இறைவனின் திருக்கோயில்களைச் சென்றடையவும் மேற் பார்வை செய்து நிர்வாகிக்கவும் இச்சபை ஏற்படுத்தப்பட்டது. முக்கியமான முடிவுகளை இச்சபை கூடி முடிவெடுக்கும். அச்சபையானது கி.பி. 12 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 17ம் நூற்றாண்டு வரை சிறப்புற இயங்கியுள்ளது என்பது தெரிய வந்துள்ளது.

கீழ்கரைப் பூந்துறை நாடும் 32 ஊர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இந்த 32 ஊர்கள் மோரூர் வகையென்றும் முளசை வகையென்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்பது சாலிவாகன சகாப்தம் 1656 மைசூர் சிங்காசனா தீசுர ஸ்ரீ கிருஷ்ண ராஜ உடையார் சாசனத்தால் ( விவேக திவாகரன் பகுதி 1 தொகுதி6) தெரிய வருகிறது.

*"மோரூடன் முளசை குலவுமே மப்பள்ளி*
*முற்று தகடப் பாடியும்*
*மோடமங்கலமேழி பள்ளியிருப்புலி பிருதி*
*முட்டில் சிறு முளசையணி மூர்*
*நீரூர் குமர மங்கை யகரஞ் சேதாபுரம்*
*நிழலுற்ற கருமாபுரம்*
*நீதிவட்டூர் மணலி கோக்களையு முஞ்சினியு*
*நிலைகொள் கூத்தம் பூண்டியும்*
*சிருருமானங்கூர் கொக்க ராயன் பேட்டை*
*தேவை காடச்சி நல்லூர்*
*செய்மா விரட்டியுட னேலத்தி வாடியுஞ்*
*செய்ய படை வீடு பட்லூர்*
*ஏரூர் வயற்கழனூர் மண்டபத்தூர் தோக்கை*
*யின்பமிகு சித்தனந்தூர்*
*இணையில் கத்தேரியுடன் முப்பத் திரண்டூர்க*
*ளினிய பூந்துறை நாடே "*

என்று கீழ்கரைப் பூந்துறை நாட்டின் ஊர்களைப் போற்றிப் புகழ்கின்றது. கொங்கு மண்டல ஊர்த்தொகைப் பாடல்.

# கொங்கு வேளாளர் குலங்கள்

குலம், கூட்டம், குடி, கோத்திரம் என்பன ஒரு பொருள் குறித்த பல சொற்களாகும். ஒரு பெரியாரின் ஒரே கால்வழித் தோன்றி பல குடும்பங்களாகப் பிரிந்து உறவுப் பிணைப்புடன் வாழும் குடும்பங்கள் என்பது இதன் பொருளாகும்.

மிகப்பழமையான, தொன்மையான தமிழர் இனமாகிய கொங்கு வேளாளர் சமுதாயத்தில் அடையாளப் பெயர்கள், குறியீட்டுப் பெயர்கள் சங்ககாலம் முதற்கொண்டு வழங்கி வந்துள்ளன. இப்பெயர்களை மானிடவியல் அறிஞர்கள் ( TOTEM SYMBOLS ) எனக் குறிப்பிடுவர்.

எடுத்துக்காட்டாக,

### ஆந்தை குலம்

இக்குலத்தைச் சேர்ந்த கொங்கு வேளாளர்கள் ஆந்தை என்னும் பறவையை தெய்வமாக கருதி வணங்குவார்கள்.

### ஈச்சன் குலம்

ஈச்ச மரத்தை புனிதமாகக் கருதி வணங்குவார். ஈச்ச மரத்தை வெட்ட மாட்டார்கள்; விறகு எரிக்க மாட்டார்கள்; ஈச்ச மரத்தில் ஏற மாட்டார்கள்; ஈச்சன் பாயை பயன் படுத்த வாங்க மாட்டார்கள்.

### காடை குலம்.

காடைக் குருவி என்னும் பறவையை புனிதமாகக் கருதி வணங்குவர். இதனைக் கொல்லவோ சாப்பிடவோ மாட்டார்கள்.

### செம்பூத்தன் குலம்.

இக்குலத்தைச் சேர்ந்தவர்கள் செம்பூத்து என்னும் பறவையை தெய்வீகப் பறவையாகக் கருதி வணங்குவார்கள். இப் பறவையைக் கொல்லவோ உண்ணவோ மாட்டார்கள்.

### பண்ணை குலம்

பண்ணை என்னும் வகையைச் [illegible] மாட்டார்கள்

### பில்லை குலம்.

இப்பிரிவினர் பில் என்னும் தானியத்தை உண்ண மாட்டார்கள்.

### வரகு உண்ணாக்குலம்.

இவர்கள் வரகு என்ற தினையைப் பயன்படுத்தி வரகுச் சோறு சமைக்க மாட்டார்கள்.

### வெண்டுவ குலம்

இக்குலத்தினர் வெண்டைக்காய் என்ற காயை சாப்பிட மாட்டார்கள்.

கொங்கு வேளாளர் குலத்தில் மிகப்பழமையான குலங்கள் என கீழ்க்காணும் குலங்களைச் சுட்டிக் காட்டலாம். அவை,

| | | |
|---|---|---|
| 1. அந்துவன் | 2. ஆதி | 3. கண்ணன் |
| 4. காரி | 5. கிரன் | 6. செங்கண்ணன் |
| 7. செம்பன் | 8. பதுமன் | 9. மணியன் |
| 10. மூலன் | 11.வண்ணக்கன் | 12. வெளியன். |

குலங்களின் பெயர்கள் முதற் சங்க காலச் சொற்களாகவும் இடைச் சங்க காலச் சொற்களாகவும் வகைப்படுத்தலாம்

பயிரன, கணக்கன், சேரன், பாண்டியன் என்பன முதற் சங்க காலப் பெயர்கள்.பூசன், பூச்சந்தை, தழிஞ்சி, பொருளந்தை, சாத்தந்தை போன்றவற்றை கடைச்சங்க காலத்தில் - தமிழ்மொழி பண்பட்ட மொழியாக வளர்ந் தோங்கிய அக்காலகட்டத்தில், கொங்கு வேளாளர்கள் தமிழ் இலக்கண நெறிப்படி தங்கள் குலங்களுக்கு பெயர் சூட்டிக் கொண்டனர்

பூசன் : புறத்துறை : போர் இலக்கணம்
தழிஞ்சி : புறத்துறை : போர் இலக்கணம்
பொருளந்தை : பொருன் + தந்தை
பூத்தந்தை ( பூச்சந்தை ) : பூதன் + தந்தை
செவ்வாயர் : போர் இலக்கணம்
கணவாளர் : போர் இலக்கணம்

சாத்தந்தை என்பதும் கொங்கு வேளாளர் குலங்களில் ஒன்று தொல்காப்பியர்சாத்தந்தை என்ற பெயர் வடிவிற்கு இலக்கணம் கூறியுள்ளார்.

"இயற்பெயர் முன்னர் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட அகர நிலையும்
மெய்யொழித்து அன்கெடும் அவ்வியற் பெயறே."
( தொல் 347)

பெரும்பாலான குலப் பெயர்கள் காரண காரியங்களைக் கொண்டு, அதாவது தாம் குடி பெயர்ந்த ஊர்கள், தலைமை நடத்திச் சென்ற தளபதிகள், தம் இனத்தில் புகழ் பெற்ற பெரியோர்கள் ஆகியோர்களின் நினைவாக ஏற்பட்டிருக்கக் கூடும்.

எடுத்துக்காட்டாக, விலையர் குலம் என்றொரு கொங்கு வேளாளர் குலம் உண்டு. இக்குலத்தலைவன் ஒருவன் காணி பெறுவதற்காக தனது தலையை அரிந்து விலையாகக் கொடுத்துள்ளான். இதனால், இக்குலத்தினர்க்கு விலையர் குலம் அல்லது விளையன் கூட்டம் என்ற பெயர் ஏற்பட்டது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க கொங்கு வேளாளர் குலங்களின் தோற்றம் பற்றி கொங்கு காணியாணப் பட்டயம் விரிவாக எடுத்துரைக்கின்றது.

சேர, சோழ, பண்டிய மன்னர்களுக்கு மதுக்கரை செல்லாண்டியம்மன் குலதெய்வம் ஆனதால் மூவேந்தர்களும்

செல்லாண்டியம்மன் கோயிலுக்கு அருகே தங்கள் எல்லைகளை சரி செய்து கொள்ளவும் அவரவர் நீதி நெறிமுறைகளைப் பற்றி கலந்து பேசவும் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை அங்கு கூடுவது வழக்கம்.

அவ்வாறு ஒரு முறை கூடிய போது, அப்போது சோழ நாட்டை அரசாட்சி செய்து கொண்டு இருந்த கரிகால் சோழனுக்கு தன் தந்தை பெற்ற சாபத்தினால் சித்த பிரம்மை ஏற்பட்டு விட்டது. இதனால் சேரனும் பாண்டியனும் சோழ நாட்டில் இருந்து நான்கு வர்ணத்தாரையும் வரவழைத்து கரிகால் சோழனுக்கு சித்த பிரம்மை ஏற்பட்ட காரணத்தையும் அதற்கான பரிகாரத்தையும் அறிய கேட்டனர்.

அதன் படி கொங்கேழு சிவாலயம் தரிசித்தால் கரிகாலனுக்கு சித்தப் பிரமை நீங்கும். என்பதால் திருக்கடையூர் வந்து குருவாகிய சிவசுப்பரமணியக் குருக்களை வணங்கி அவரையும் அழைத்துக் கொண்டு வேளாளர்களுடன் கொங்கு நாட்டுக்குள் சோழர் தலைமையில் அனைவரும் வருகின்றனர்.

கம்ப நாட்டான் அவர்களை வழிமறித்து குல கோத்திரங்களை அறியாமல் கொங்கில் விட மாட்டோம் என்றார். 24 மணி நேரத்திற்குள் குலகோத்திரங்களும் கவுண்டர் பட்டங்களும் செய்து காட்டினால் ஒப்புக்கொள்வோம். இல்லாவிட்டால் வந்த வழியே தொண்டை மண்டலம் போய் சேருங்கள் என்று சொன்னார்.

அப்போது, கம்பநாட்டாரிடம் தொண்டை மண்டலத்தார் எங்கள் வேளாள இனத்தில் குழந்தை பிறந்தால் 5 பணமும் திருமணம் செய்வித்தால் கால் பணமும் மேரைக்கு 5 பணமும் எங்கள் வம்சம் உள்ளவரை கொடுத்து வருகிறோம். எங்களுக்கு குலகோத்திரம் பிரித்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அதற்கு இசைந்த கம்ப நாட்டான் வேளாளர்களை குலம் கோத்திரம் பிரித்து குலங்களுக்கு உரிய காணிகளும் காணிகளுக்கு உரிய தெய்வங்களும் வகுத்து கூறுகிறார்.

கொங்கு வேளாளர்கள் ஒரு குலத்தார் மற்றொரு குலத்தாருடன் திருமண உறவு வைத்துக் கொள்ளவது மரபு. ஒரே குலத்தை சார்ந்தவர்கள் சகோதர சகோதரிகள் ஆக கருதப்படுவார்கள். இவ்வாறு அறிந்து கொள்வதற்கு வசதியாகவே குலப்பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டன.

பல்வேறு கால கட்டங்களில் பல குலங்கள் மறைந்து போய் புதிய குலங்கள் உருவாகி பிரிவாகி உள்ளன. எடுத்துக் காட்டாக, காடை என்ற குலம் பனங்காடை குலம், எழுமாத்தூர் காடை குலம், வல்லியிறைச்சல் காடை, மேல் பூந்துறை காடை, கீழ் பூந்துறை காடை என பிரித்லையும் கண்ணகுலத்திலிருந்து கண்ணந்தை குலமும், பொருளந்தை குலத்திலிருந்து முழுக்காதன்குலமும் உருவாகியதைக் கூறலாம். தற்போது 66 குலங்களைப் பற்றிய தகவல்களே முழுமையாக அறியப்பட்டுள்ளன. அவை.

1. அழகன் குலம் 2. அந்துவன் குலம் 3. ஆடர்குலம் 4. ஆவன் குலம் 5. ஆந்தை குலம் 6. ஆதி குலம். 7. ஈஞ்சன் குலம் 8. எண்ணை குலம் 9. ஒழுக்கர் குலம் 10. ஓதாலர் குலம் 11. கண்ண குலம் 12. கண்ணந்தை குலம் 13. கணவாளன் குலம். 14. கணக்கன் குலம் 15. காரி குலம் 16. காடை குலம் 17. கிரன் குலம் 18. குழாயர் குலம் 19. கூறை குலம் 20. கோவேந்தர் குலம் 21. சாத்தந்தை குலம் 22. செம்பூத்தர் குலம் 23. செம்ப குலம் 24. செங்குன்னி குலம் 25. செங்கண்ணர் குலம் 26. செவ்வாயர் குலம் 27. செல்வன் குலம் 28. செவ்வந்தி குலம் 29.சேரன் குலம் 30. சேரலன் குலம் 31. சேட குலம் 32. தழிஞ்சி குலம் 33. தனஞ்செயன் குலம் 34. தூரன் குலம் 35. தேவேந்தர் குலம் 36. தோடை குலம் 37. நீருண்ணியர் குலம் 38. பண்ணர் குலம் 39.பணையன் குலம் 40. பயிரன் குலம் 41. பவளக் குலம் 42. பனங்காடை குலம் 43. பதரியன் குலம் 44. பதுமன் குலம் 45. பாண்டியர் குலம் 46.பில்லன் குலம் 47. பூசகுலம் 48. பூந்தை குலம் 49. பூச்சந்தை குலம் 50. பெரிய குலம் 51.பெருங்குடியான் குலம் 52. பெரழந்தை குலம் 53. பொன்னர் குலம். 54. பொடியன் குலம் 55.பொருளந்தை குலம் 56.மயிலர் குலம் 57.மாடை குலம் 58. மணியன் குலம் 59. முத்தன் குலம் 60. மேதி குலம் 61. வண்ணக்கன் குலம் 62. விலையன் குலம் 63. வில்லியன் குலம் 64. வெண்டுவன் குலம் 65. வெள்ளம்பர் குலம் 66. வேந்தன் குலம்.

கொங்கு வேளாளர் குலப்பிரிவுகளை ஒதாளர் அலகுமலை குறவஞ்சி இவ்வாறு குறிப்பிடுகிறது.

*"பொன்னர் ஒதாலர் பூசர் செம்பூதர்
அன்னதரு காரன் ஆவண சாத்தந்தை
கோவர் குழாயர் கோவேந்தர் செம்பர்
மாவலர் பண்ணர் மாடை காடை
பூச்சந்தை ஆந்தை பொருளந்தை ஒழுக்கர்
வாச்ச கண்ணந்தை மணியன் தூரன்
செங்குண்ணி படுகுண்ணிசேகர் செவ்வாயர்
செங்கண்ணர் வண்ணக்கர் சேரன் சிலம்பன்
புத்தன் பொடியன் பூந்தன் வேந்தன்
மூத்தன் காரி மூல குலத்தான்
களிஞ்சி நீலன் கணவாளன் அழகன்
விளியன் விலையன் வில்லி செல்லன்
ஆடை அழகன் ஆதி அந்துவன்
சேடன் பதரி சேரலன் மூரியன்
பெரிய குலத்தான் பெறழந்தை கடுந்துளி
வரி விழி பவளன் மாதங்க கோத்திரன்
பனை பூந்தாரன் கோரக்கர் பாண்டியர் கணக்கர்
குணியன் குண்டலி கூரை கிரை
நீலன் மேதி நேரியன் தூரியன்
தூல குலத்தான் சோதி தேவேந்திரன்
மீனவன் எண்ணை வெண்டுவன் ஈஞ்சன்
மானியர் வாணர் மாதுலி பைதலி
ஆதிரை விரவுளன் அவுரியன் சவுரியன்
கோதறு குயிலர் குங்குலி கோத்திரத்தார்
பயிரன் பரமன் பஞ்சன் பூதியன்
உயர்மழு வழகர் உறுகுல விரதர்
தோடை துந்துமன் சோமன் தழிஞ்சி
காடான் உவனன் கவுரி குலத்தான்
நாரை நீறுணி நந்தர் கொட்டாரர்
கூறுபன் உழுவர் கூறு பனங்காடை
சேவடி புன்னை தேமான் சுரபி
மூவர் குலத்தான் மொய்ம்பன் கவளன்
பெருங்குடி வேந்தன் பிரமன் இந்திரன்
கருங்கண்ணன் வேணியன் கம்பகுலத்தான்
அக்கினி கோத்திரன் ஆடை கொண்டரங்கி
தக்கவர் குலத்தான் சாத்துவராயன்
பாலியன் நெய்தலி பாம்பன் கட்செவி
நீல விலோசனன் நிறைதனவந்தன்
அனகன் சனகன் ஆதித்ரேய கும்பன்
முனை வீரன் இள்ளியன் முக்கண்ண குலத்தான்.*

## கண்ண குலம்

தமிழ் நாட்டில் **கண்ணன்** என்னும் பெயர் மிகவும் தொன்மையுடைய ஒரு சிறப்பு பெயராகக் காணப்படுகிறது. பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டம் கொடுமணல் என்னும் ஊர் பதிற்றுப்பத்தில் குறிக்கப்பெற்ற பழம் பெரும் பேரூர். அங்கு தமிழ்ப் பல்கலைக்கழகத்தினர் ஆய்வு நடத்தி அவ்வூரின் பெருமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். அங்கு கிடைத்த 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஒடுகளில் **கண்ணன் ஆதன்** என்று தமிழ்ப் பிராமி எழுத்துக்களில் எழுதப் பெற்றுள்ளது. எனவே, இப்பெயர் கொங்கு நாட்டில் வழங்கப் பெற்றதை அறிகிறோம்.

எகிப்து நாட்டு நைல் நதிக்கரையில் அமெரிக்க நாட்டுத் தொல்லியல் ஆய்வாளர்கள் அகழ்வாராய்ச்சி நடத்திய போது கண்ணன் என்று தமிழ் பிராமி எழுத்தில் எழுதப்பெற்ற 2000 ஆண்டுகட்கு முற்பட்ட பழைய ஓடு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பது வியப்புக் குரியது. தமிழ் நாட்டிலிருந்து சங்க காலத்தில் மேலை நாடு சென்ற வணிகர் பெயர் கண்ணன் என்பதாகலாம்.

### சங்க கால வள்ளல்

சங்க காலத்தில் பல்வேறு குறுநில மன்னர்கள் வள்ளல்களாக வாழ்ந்து வரையாது வழங்கிப் புலவர்களை ஆதரித்து வந்தனர். அவர்களுள் கண்ணன் எழினி என்பவர் ஒருவர். எழினி என்று பெயர் வைத்திருப்பதால் அவர் தகடூர் அதியமான் மரபைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும். எனவே அவரும் கொங்கு நாட்டவர் ஆகலாம்.

### தமிழ் பாடிய புலவர்கள்

சங்க இலக்கியத்தில் பயின்று வரும் புலவர் பெயர்களில் கண்ணன் என்ற சொல்லின் அடியாகப் பிறந்த பெயர்களே மிகுதியாகும். சுமார் 42 புலவர்கள் கண்ணன் என்ற பெயரைப் பெற்றுள்ளனர். அவர்கள் எல்லோரும் கண்ண குலத்தினர் என்று கூறுவது நம் கருத்து அல்ல. அப்பெயர் பெற்ற சிறப்பைக் காட்டுவதே நமது நோக்கமாகும். அவர்களுள் சிலராவது கண்ண குலத்தினரின் முன்னோர் ஆக இருக்கலாம் என்பது புலவர் செ. ராசு அவர்களின் கருத்து.

1. ஆசிரியன் பெருங்கண்ணன்
2. ஆவூர்கிழார் மகனார் கண்ணனார்
3. உம்பர்க் கோட்டு இளங்கண்ணனார்
4. உறையூர் முதுகண்ணனர் சாத்தனார்
5. கடலூர்ப் பல்கண்ணனார்
6. கடியலூர் பல்கண்ணனார்
7. கண்ணன் கூத்தனார்
8. கண்ணன் கொத்தனார்
9. கண்ணன் புல்லனார்
10. கதக் கண்ணனார்
11. கண்ணன் நாகனார்
12. கண்ணனார்
13. கருவூர்க் கண்ணன் பாணனார்
14. காட்டூர்க் கிழார் மகனார் கண்ணனார்
15. காவிரிப்பூம் பட்டினத்துக் காரி கண்ணனார்
16. காவிரிப்பூம் பட்டினத்துக் சேந்தன் கண்ணன்
17. கிடங்கில் காலி கிரன் கண்ணனார்
18. கிடங்கில் கலபதி நக்கண்ணனார்
19. குட்டுவன் கண்ணனார்
20. குமட்டூர்க் கண்ணனார்
21. கூடலூர்ப் பல்கண்ணனார்
22. கொல்லிக் கண்ணன்
23. சொல்லூர்க் கோசிகன் கண்ணனார்
24. சேந்தங் கண்ணனார்
25. தாமப்பல் கண்ணனார்
26. தாயங் கண்ணனார்
27. நாமலார் மகன் இளங்கண்ணன்
28. பாண்டரங் கண்ணனார்
29. பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்
30. பூங்கண்ணன்
31. பூதங்கண்ணனார்
32. பெருங்கண்ணனார்
33. மதுரைத் தத்தங் கண்ணனார்
34. மதுரைப் புல்லங் கண்ணனார்
35. மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்

36. மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்
37. முதுவெங் கண்ணனார்
38. வாயிலங் கண்ணன்
39. விழிக்கட்பேதை பெருங்கண்ணன்
40. வெண் கண்ணனார்
41. வேட்ட கண்ணன்
42. வேம்புற்றூர் கண்ணன் கூத்தன்

## புராணங்களில் கண்ணகுலம்

இதிகாசங்களிலும் புராணங்களிலும் குறிப்பாக மகாபாரதத்திலும் கண்ணன் என்ற பெயர் பெறும் இடத்தை நாம் நன்கு அறிவோம். கண்ணன் துவாரகையில் வாழ்ந்த இடம் இப்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அதனால் கண்ணன் உலகில் வாழ்ந்த மிகச் சிறந்த வரலாற்று நாயகன் என்பதை அறிகிறோம்.

மேற்கண்ட சான்றுகளின் மூலம் கண்ணன் என்ற பெயர் தொன்மையுடையது என்றும் எல்லோராலும் விரும்பி ஏற்றுக் கொள்ளக் கூடிய பெயர் என்பதும் தெளிவாகிறது. அச்சிறப்புமிகு பெயரை கண்ணக் குலம் பெற்றிருப்பது சிறப்புக்குரியது.

**கண்ணகுலம்**
**கண்ண கோத்திரம்**
**கண்ண குல கோத்திரம்**
**கண்ணங் கூட்டம்**

என்றெல்லாம் அழைக்கப்பெறும் இக்குலம் கொங்கு வேளாளர் குலங்களில் மிகமிக முக்கியமான குலங்களில் ஒன்று. மிக அதிகமான குடிகளைக் கொண்ட குலம் கண்ண குலம். சிலர் **கவுண்டரில் பாதி கண்ணன்** என்று கூறுவர். அக்கூற்று மிகையல்ல. உண்மையே என்று சொல்ல கூடிய அளவுக்குக் கண்ண குலப் பெருமக்கள் பல்கிப் பெருகியுள்ளனர்.

சிலர் கண்ண குலம் என்பதைக் கன்னகுலம் என்றும் உச்சரிப்பர். உச்சரிப்பால் வேறுபட்டதே தவிர இரண்டும் ஒரே குலமே.

பொருளதிகாரத்தில் **வேந்துவினை இயற்கை** என்னும் நூற்பாவிற்கு உரை எழுதும் இடத்திலும் (32)

***இது மலையமாதவன் நிலங்கடந்த நெடுமுடி***
***யண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த***
***பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்***

என்று நாச்சினார்க்கினியர் கூறுகிறார்.

*" சீர்பெறும் பழையனூர் நீலிபலி கொண்டிடும்*
*செயகங்கை குலமரபுளோர்*
*சித்திரமே ழிக்கொடி குவளைமா லைப்புலவர்*
*தென்றகார்சிறை தவிர்த்தோர்*
*சிங்கா தனம்பெற்ற கம்பன் தமிழ்க்கடிமை*
*செய்தினிய கீர்த்தி பெற்றோர்*
*செம்பகுலர் செல்லகுலர் தூரைகுலர் கூறைகுலர்*
*செங்கண்ணி செவந்தி குலமும்*
*சீர்பெருகு சேரகுலர் தேவேந்திரன் விளையகுலர்*
*செயபண்ணை கண்ணந்தையும்*
*திறமான கண்ணகுலர் காரிகுலர் பனையகுலர்*
*திறல்பனங்காடை குலமும்*
..................................................................................
.................................................... "*

எனக் கொங்கு வேளாளர் குலங்களைத் தொகுத்துக் கூறும் பாடல்கள் கண்ணர்குலத்தைத் திறமான கண்ண குலர் என்று சிறப்பான அடைமொழியுடன் கூறுகிறது.

பொங்கலூர் நாட்டில் உள்ள பல குலங்களில் கண்ணகுலமும் ஒன்று. அதனைத் தொகுத்து **அலகுமலைக் குறவஞ்சி** பின்வருமாறு கூறுகிறது.

*பொன்னர் ஒதான கோத்திரர் குழாயர்*
*பொருந்துசாத் தந்தை செம்பர் செம்பூதர்*
*கண்ணர் மாடையும் பூசலும் வெண்டுவர்*
*காடை செங்கண்ணர் பொருளந்தை பயிரர்*

*எண்ணை ஆந்தை கோவேந்தர் பனங்காடை*
*இப்படிச் சிறந்தே ஓங்கி யிருக்கும்*
*இன்னும் நற்குல வேளிர்கள் வாழ்வுற்று*
*இருக்கும் பொங்கலூர் நாடெங்கள் நாடே*

கண்ணன் என்பது தொன்மையான தமிழ்ப்பெயர். சங்க காலத்தில் அதிகமாகக் காணப்படும் பெயர்களில் கண்ணன் என்பதும் ஒன்று என்பதை முன்னரே கண்டோம்.

அதனால் கண்ணன் என்னும் குல முதல்வரால் இக்குலப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். அவர் வந்தோர் தங்களைக் கண்ண குலத்தார் என்று அழைத்துக் கொண்டிருக்கலாம். இக்கருத்து கொங்கு ஆய்வறிஞர் டி. எம். காளியப்பா அவர்களால் வலியுத்தப் பெறுகிறது.

புலவர் அ.மு. குழந்தை அவர்கள் கண்ணன் என்பது கண் என்னும் உறுப்பால் பெற்ற பெயராக இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

டாக்டர் கிருட்டினசாமி அவர்கள் கண்ண குலத்தார் உண்ணக் கூடிய பிராணிகளின் கண்ணை உண்ண மாட்டார்கள் என்று எழுதியுள்ளார். எனவே கண்கள் இவர்களால் புனிதமாக கருதப்படுகிறது என்பது அவர் கருத்து.

தொல்காப்பிய உரை, புறநானூறு போன்றவை வேறு சிறந்த ஆதாரங்களைத் தருகின்றன. தொல்காப்பியப் பாயிர உரையில் நச்சினார்க்கினியர் அகத்தியர் தமிழ்நாடு வந்த செய்தியைக் கூறுகிறார்.

*தேவரெல்லாம் கூடி யாம் சேரவிருத்தலின் மேருத் தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. இதற்கு அகத்திய னாரே ஆண்டு இருத்தற் குரியவர் என்று அவரை வேண்டிக்கொள்ள அவரும் தென்திசைக்கண் போது கின்றவர் துவாராபதியில் போந்து நிலங்கடந்த*

*நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர்*
*பதினென்மாரையும்*
*பதினென்குடி வேளிர் உள்ளிட்டாரையும் அருவாள*
*ரையும் கொண்டு போந்து காடுகொடுத்து நாடாக்கி.*

என்ற பகுதியால் கண்ணனுக்கும் தமிழக வேளாளருக்கும் தொடர்பு இருப்பது புலனாகிறது. அகத்தியர் காலத்தில் துவாரகை வேளாளர்கள் இங்கு குடியேறியமையால் இது தெளிவாகிறது.

இந்திய வரலாறு எழுதிய ரொமேசந்திர தத்தர்கண்ணனைத் தலைவராகக் கொண்டவர்கள் மதுரையை விட்டு நீங்கிக் கூர்ச்சரத்தில் உள்ள துவாரகைக்குக் குடியேறிய போது கலகம் ஏற்படப் பலர் கடல் வழியே தென்னிந்தியாவை அடைந்தனர். என்று கூறுகிறார்.

புறநானூற்றில் (201) கபிலர் ஒரு வேளிர் தலைவனைப் பாராட்டும் போது

*"................ நீயே*
*வடபால் முனிவம் தடவினுள் தோன்றிச்*
*செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை*
*உவரா ஈகைத் துவரை யாண்டு*
*நாற்பத் தொன்பது வழிமுறை வந்த*
*வேளிருள் வேளே."*

என்று பாடுகிறார்.

துவாரகையிலிருந்து 49 தலைமுறையினர் வேளிர் பட்டம் உடையவர் தமிழ் நாட்டில் வாழ்ந்தது இதன் மூலம் தெளிவாகிறது.

மேற்கண்ட சான்றுகளால் துவாரகைக் கண்ணனுக்கும் தமிழக வேளாளரில் கண்ணன் பெயர் கொண்டவர்களுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது.

கண்ணன் திராவிடர் தலைவனேயாவான் ஆரிய மரபினன் அல்லன். இவ்விதமாகக் கண்ணன் என்ற பெயர் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே பெற்றுள்ள தொடர்பு புலப்படுகிறது.

இக் கண்ணர்கள் முதலில் மூவேந்தரால் தலைய நாட்டை ஆள நியமிக்கப்பட்டனர். அங்கு அவர்கள் கண்ணர் பாடி, கண்ணபாடி, கன்னிவாடி என்னும் ஊர்களை ஏற்படுத்தினர். பின் கண்ணர் புரம், கண்ணபுரம், கன்னபுரம், என்ற ஊர்களை ஏற்படுத்தினர்.

கன்னிவாடியிலேயே தங்கிவிட்ட கண்ணகுலத்தினர் கன்னிவாடிக் கண்ணர் ஆயினர். அமராபதியைக் கடந்த போது ஏற்பட்ட தன்மையால் கண்ணந்தை குலம் பிரிந்தது. மோரூர்க் கண்ணர்கள் கிழக்கரைப் பூந்துறை நாட்டில் அரசு அமைத்தனர். இவர்களையே முக்கண்ண குலம் என்று அழகுமலைக் குறவஞ்சி குறிக்கிறது.

பின்னர், கண்ணர்கள் நசியனூர் கண்ணர், மோரூர்க் கண்ணர், மொளசிக் கண்ணர், காளமங்கலம் கண்ணர், கிழாம்பாடிக் கண்ணர், காகம் கண்ணர், காஞ்சிக்கோயில் கண்ணர், கன்னிவாடிக் கண்ணர் என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படலாயினர்.

சேலம் மாவட்டத்தில் உள்ள கண்ண குலத்தாரை **நாட்டுக் கவுண்டர்கள்** என அழைக்கின்றனர் அவர்களும் கொங்கு வேளாளர்களே. காணி பெற்றவர் காணியாளர் ஆயினர். நாடு பெற்றவர் நாட்டார் ஆகிப் பின் நாட்டு கவுண்டர்கள் ஆயினர். ஓலைச்சுவடி செப்பேடு பட்டயம் கல்வெட்டுக்கள் ஆகியவை எல்லாக் கண்ணரும் ஒன்றே என்பதற்கு ஆதாரமாக உள்ளன. வேறுபாடு பிற்காலத்தில் ஏற்பட்டதே.

**வண்ணமும் பதமும் புண்ணிய கதையும்**
**பண்ணுடன் புகழும் கண்ண கோத்திரம்**
**திக்கெல் லாம்புகழ் கண்ண கோத்திரம்**
**வேளாள குலதீப மான கண்ணர்.**

என்றெல்லாம் இலக்கியம் புகழும் கண்ண குலத்தினர் வரலாற்றில் பல்வேறு சிறப்புக்களைப் பெற்றுள்ளனர்.

## கண்ணகுல காணி ஊர்கள் .

கன்னிவாடி, காகம், கொளாநல்லி, கிழாம்பாடி, நசியனூர், காஞ்சிக் கோயில், மோரூர், முளசி, சம்பை, கத்தாங்கண்ணி, ஆலத்தூர், மணியனூர், தகடையூர், கொன்னையாறு, ஆனங்கூர், கூடல் மற்றும் பாதிரை ஆயி 18 ஊர்கள் கண்ண குலத்தாருக்கு காணியூர்கள் என்று காணிப்பாடல் குறிக்கிறது.

*கன்னி வாடி தாகம் குழாநிலை*
*கான மங்கை கிழாம்பாடி நசையனூர்*
*என்னும்காஞ் சிக்கோயில் மோரூர் முளசியும்*
*ஏக சம்பையும் கற்றாங் காணியும்*
*வண்ண மேவிய ஆலத்தூர்ப் பட்டணம்*
*மணிய னூருடன் ஓடை தகடையூர்*
*கொன்னை யாறுடன் ஆனங் கூரதும்*
*கூடல் பாதிரை கண்ண குல ஊர்களே.*

பாட்டாலி பற்றிய பாடல் ஒன்றியல் பார்ப்பதி கண்ணகுல காணியூர் என்று கூறப்படுகிறது.

*"தரனிபுகழ் பாட்டாலி அதனில் வரு குருகுலனை*
*தங்குபுகழ் சேர் கண்ணனை."*

கத்தாங்கண்ணி பட்டயம், கண்ண குலத்தார்க்கு கன்னிவாடி, காகம் குழாநல்லி, காளமங்கலம், கிழாம்பாடி, நசியனூர், காஞ்சிக் கோயில், மோரூர், முளசி, சம்பை, கற்றாங்காணி, ஆலத்தூர் பட்டணம், மணியனூர், ஓடை, தகடையூர் முதலிய 16 ஊர்களை காணியூர்களாகக் குறிப்பிடுகிறது.

## கண்ணகுல மாணிக்கி

கொங்கு நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த கண்ண குலப் பெருமக்கள் மோரூர் நல்ல புள்ளியம்மன் சந்நிதியில் கூடினர்.

இவர்கள் கிழாமபாடி, மகொன்னையாறு, நசியனூர், கன்னிவாடி, முளசி, காளமங்கலம், கொளாநல்லி, தகடபுரி, மங்கலம், காஞ்சிக்கோயில், சம்பை, கத்தாங்கண்ணி, கொடுமுடி, ஆலத்தூர்பட்டனம், மணியனூர், ஓடப்பள்ளி, பாலமேடு, ஆனங்கூர், வாளையாறு ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்கள்.

அக்கூட்டத்தில் கூத்தாடி முதலிய பல்வேறு கலைஞர்களும் கலந்து கொண்டு கண்ணகுலப் பெருமக்களின் கண்களுக்கு கலைவிருந்து அளித்தனர். அப்போது கண்ண குலத்தினர் தங்களுடைய சமய காரியங்களக்காகவும் சடங்குகளுக்காகவும் விழாக்களுக் காகவும் உற்சவத்திற் காகவும் கலைக்காகவும் ஒரு பெண் மணிக்கு **கண்ண குல மாணிக்கி** என்று பெயரிட்டு நியமனம் செய்கின்றனர். அன்று முதல் அப்பெண் **கண்ணகுல திலக மாணிக்கி** என்று சிறப்பிக்கப்பெறுகிறாள்.

கண்ண குல மாணிக்கி **தாசி** எனவும் அழைக்கப்படுகின்றாள். திருமணம் போன்ற குடும்பச் சடங்குகளிலும் கோயில் விழாக்களிலும் ஆடவும் பாடவும் இவள் அனுமதிக்கப்படுகின்றாள். ***மாணிக்கி, தாசி, தேவரடியாள்*** என்ற பெயர் இப்பெண்ணிற்கு வழங்கப்படுவதால் அவள் இழிந்தவள் அல்லது தாழ்ந்தவள் அல்லது நடத்தை கெட்டவள் என்று பொருள் அல்ல. தற்போதும் கூட நமது நாட்டில் பல மாநில அரசுகள் அரசவைக் கவிஞர்களை நியமிப்பது போலத்தான் இதுவும்.

மாணிக்கி ஆன பெண்ணிற்கு படைகொடைகள் அறிவிக்கப்பட்டிருந்தன. கண்ண குலத்தார் குடிக்கு ஒரு பணமும் ஒரு வல்லம் அரிசியும் கொடுக்க ஒப்புக் கொண்டனர். மேலும் நன்செய் நிலம் 50 குழி அளவு மானியமாக அளித்து உள்ளனர். இவை கண்ண குலத்தினர் கலையை எவ்வாறு போற்றி வளர்த்தனர் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இச்செய்தியினை ***கண்ணர் குல அகவல்*** என்ற ஓலைப் பட்டயம் தெரிவிக்கின்றது. இப்பட்டயம் தற்போது பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

## மன்றாடியார் பட்டம்.

**சண்ட பராக்கிரம மன்றாடியோன்**
**சதுர்வேதி மங்கலத்து மன்றாடி**

என்று வருகின்ற சாசனத் தொடர்களைக் கருதும்போது ஊர் மன்றத்திலே இடம்பெற்று நீதி வழங்குபவர் அல்லது வழக்குத் தீர்ப்பவர் **மன்றாடி** எனப் பெயர் பெற்றார் எனக் கருதலாம்.

மேலும், கால்நடை பரிபாலிப்பவர்க்கும் மன்றாடி என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. "விட்ட பசு முட்டாமல் மேய்த்தடக்கிப் பாசத்தால் கட்டிவிடு மன்றாடி" என்ற வழக்கு இப்பொருளையே அளிக்கிறது. இப்பட்டம் முன்பு முடியுடைய அரசர்களால் வழங்கப்படும் ஓர் உயர்ந்த விருது ஆகும்.

மன்றாடியார் என்றதும் பழைய கோட்டை பட்டக்காரர் ஆகிய நல்லசேனாதிபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் நினைவு நம் அனைவருக்கும் வரும் பயிர குலத்தைச் சேர்ந்த இவர் கொங்கு வேளாளரில் மன்றாடியார் பட்டம் பெற்றதைப் போலவே கொங்கு வேளாண் பெருமக்களில் பலரும் குறிப்பாக கண்ண குலத்தாரும் மன்றாடியார் பட்டம் பெற்றுள்ளனர்.

| | | |
|---|---|---|
| பெரிய குலம் | - | வேணாடுடைய மன்றாடியார் |
| பொருள்தந்த குலம் – | - | காங்கேய மன்றாடியார் |
| செங்கண்ணகுலம் – | - | பல்லவ மன்றாடியார் |
| பவளகுலம் – | - | வாணவராய மன்றாடியார் |
| சாத்தந்தை குலம் – | - | உலகில் மன்றாடியார் |
| எண்ணை குலம் – | - | கண்ணப்ப மன்றாடியார் |
| மூல குலம் – | - | கவரை மன்றாடியார் |
| பொன்ன குலம்– | - | வாலை மன்றாடியார் |
| குழாய் குலம் – | - | தேவ மன்றாடியார் |
| கண்ணந்தை குலம் – | - | மும்முடி நல்லதம்பி மன்றாடியார். |

மேற்கண்டவாறு பலர் மன்றாடியார்கள் பட்டம் பெற்றுள்ளனர்.

# கண்ண குலத்தார் காணி

கண்ண குலத்தில் பிறந்த ஸ்ரீவில்லிப்புதூர் முத்துசாமி கவுண்டர் மகன் நல்லதம்பி கவுண்டர் குழித்தலை வட்டாரம் காவேரிக் கரையில் அமைந்துள்ள செல்லாண்டியம்மன் கோயிலை மையமாக வைத்து கோயிலுக்குக் கிழ்ப்புறம் சோழ நாட்டின் மேற்கு எல்லை என்றும் கோயிலின் மேல்புரம் சேர நாட்டின் கிழக்கு எல்லை என்றும் மலை மேல் கல் நாட்டி உறுதிப்படுத்தி சேர, சோழ, பாண்டிய மன்னர் மூவருக்கிடையில் ஏற்பட்டிருந்த எல்லை தகராறை தீர்த்து வைத்தார்.

இதனால் மகிழ்ச்சி அடைந்த மூவேந்தரும் நல்லதம்பி கவுண்டருக்கு **மும்முடி நல்லதம்பி மன்றாடி** என்ற பட்டங் கொடுத்து தலைய நாட்டு பாடி 12 பூண்டி 36ம் கூடிய 48 கிராமத்தை ஆண்டு வரும்படி தலைய நாட்டின் தலைமை ஊரான கன்னிவாடியில் நல்லதம்பி கவுண்டரை அமர்த்தினர்.

பிறகு, அவ்வேளை தலைய நாட்டில் வசித்து வந்த ஆனங்கூர் காரி, தலையூர் வண்ணக்கன், கூத்தம்பூண்டி செம்பூத்தன் பூசந்தை இனுங்கனூர் தனஞ்சயன் ஆகிய பாதிப் பங்காளிகளையும் அளித்து முதன்மைப் பங்காளிகளான வில் வேட்டுவர், விழக்கு வேட்டுவர், கரும்பிளி வேட்டுவர், குண்ணாடி வேட்டுவர், மச்சாடி வேட்டுவர் 500 கோத்திரம் செட்டிகள் ஆகியோர் முன்னிலையில் அவருக்கு ராஜ விருதுகளும் மரியாதைகளும் வழங்கி மகுடாபிஷேகம் செய்து வைத்தனர்.

இதனால், கண்ண குலத்தாருக்கு முதல் காணியூர் தலைய நாட்டு கன்னிவாடி என்று அறியலாம். இங்கிருந்தே கண்ண குலத்தினர் அனைவரும் கொங்கு நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவினர். இதற்கு இன மோதல் நிகழ்ச்சி ஒன்று காரணமாயிற்று.

மும்முடி நல்லதம்பி மன்றாடியார் வழியினரான கொங்கு வேளாள கண்ணகுலத்தினர் தங்களின் முதல் காணியூரான கன்னி வாடியில் தொடர்ந்து ஆட்சி செய்து கொண்டிருந்த கால கட்டம் அது.

ஒரு நாள் கன்னிவாடி கண்ண குலத்தை சேர்ந்த கந்தசாமி கவுண்டர் என்பவர் மகள் நல்லம்மாளும் இடைக்கலபாடி என்ற ஊரை சேர்ந்த வன்னியர் இனத்து வள்ளியம்மாளும் காதப்பாழி என்ற காட்டிற்கு விறகு பொறுக்கச் சென்றார்கள். பொறுக்கிய விறகுகளை கட்டி வைத்து விட்டு அங்கிருந்த மர நிழலொன்றில் இருவரும் இளைப்பாறினார்கள்.

பிறகு, நல்லம்மாள் அருகிலிருந்த நடை கிணற்றில் இறங்கி தண்ணீர் மொண்டு குடிப்பதைக் கண்டு வள்ளியம்மாள் தனக்கும் தண்ணீர்மொண்டு ஊற்றும்படி நல்லம்மாளை கேட்டுக் கொண்டாள்.

இதற்கு நல்லம்மாள் உனக்கு தண்ணீர் மொண்டு கொடுப்பதை யாராவது பார்த்தால் எங்கள் இனத்தார் என்னை ஜாதியிலிருந்து நீக்கி விடுவார்கள் என்று கூறி தண்ணீர் மொண்டு தர மறுத்து விட்டாள். இதனால் ஆத்திரம் அடைந்த வள்ளியம்மாள் உன்னை என் அண்ணனுக்கு திருமணம் செய்து வைக்கிறேன் பார் இல்லையென்றால் நான் பள்ளி ஜாதியில் பிறந்தவள் அல்ல என்று சபதம் செய்தாள்.

நல்லம்மாளும் கோபத்துடன் உன் அண்ணனுக்கு கருப்பு நாயை திருமணம் செய்யாவிட்டால் நான் கண்ண குலத்திலே பிறந்தவள் அல்ல என்று சவாலிட்டு எதிர் சபதம் செய்தாள். பின்னர் இருவரும் தங்கள் வீடு சென்று தங்கள் பெற்றோரிடமும் ஊர்ப் பெரியோரிடமும் இதனைக் கூறினார்கள். இதனால், இரு தரப்பிலும் பகையுணர்ச்சி தோன்றி கொந்தளிக்கத் தொடங்கியது.

வன்னியர்கள் அப்போது கொங்கு நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த மூன்றாம் நந்திவர்மன் என்ற பல்லவ மன்னனின் ஆதரவை நாடி தங்களின் சபதம் நிறைவேற உதவும் படி கேட்டுக் கொண்டார்கள். அரசனும் வன்னியர்களுக்கு ஆதரவாக நல்லம்மாளை வன்னியருக்கு திருமணம் செய்து கொடுக்கும்படி மும்முடி நல்ல தம்பி கவுண்டருக்கு ஓலை எழுதி அனுப்பினான்

அரசன் திருமடல் கண்டு அதிர்ந்த மும்முடி நல்ல தம்பி கவுண்டரும் தனது பங்காளிகளை எல்லாம் கூட்டி அரசனின் ஓலையைப் பற்றி ஆலோசித்து முன் பின் நடந்த படி நடந்து கொள்கிறோம் என்று மொட்டையாய் ஒரு ஓலை எழுதி அரசனுக்கு அனுப்பினார்.

வன்னியர்கள் கன்னிவாடிக்கு வந்து மும்முடி நல்ல தம்பியிடம் நல்லம்மாளை திருமணம் செய்ய பெண் தரும்படி கேட்டனர். நல்ல தம்பியும் திருமணத்திற்கு சம்மதித்து வெள்ளிக்கிழமை என்று ஒரு நாளும் குறித்து உறுதி கூறி அவர்களை அனுப்பி வைத்தார். பின்னர், தனது பங்காளிகளையும், ஆண்டி, நாவிதர், பறையர்களையும் அழைத்து நல்லம்மாள் சபதம் நிறைவேற திட்டமொன்றை வகுத்தார்.

குறிப்பிட்ட வெள்ளிக்கிழமை அன்று வன்னியர்கள் சீர்வரிசையுடன் கன்னிவாடி வந்தடைந்து விடுதியில் தங்கினர். நல்லம்மாள் வீட்டிலே தோரணங்கள் தொங்குவதையும் மணவறை அலங்கரிக்கப்பட்டிருப்பதையும் வாத்தியங்கள் முழங்குவதையும் கண்டு மகிழ்ந்தனர். வன்னிய சீர்க்காரி பேழையில் கூறைப்புடவையும், நகையையும் ஏந்திக் கொண்டு நல்லம்மாள் வீட்டுக்கு வந்து பெண் பூட்டும் சீர் செய்ய நல்லம்மாளை மணவறைக்கு வருமாறு அழைத்தாள்.

அச்சமயம், கண்ண குலத்தார் தங்களின் திட்டப்படி நல்லம்மாள் வளர்த்து வைத்திருந்த கரு நாயை மண மேடைக்கு

கொண்டு வந்தார்கள். இதைக் கண்டு அதிர்ச்சியடைநத சிர்க்காரி வெளியே ஓடிவந்தாள். உடனே. ஆண்டிச்சி குறுக்கிட்டு உங்களுக்கு நிச்சயித்தது இந்த கருநாயை தான் என்று கூறி சிர்க்காரியை விளக்குமாற்றால் அடித்தாள். வலி தாங்காமல் அலறித்துடித்த சிர்க்காரியின் ஓலம் கேட்டு வன்னியர்கள் வீட்டிலிருந்து ஓடிவந்தார்கள். அப்போது ஆண்டியும் நாவிதனும். பறையரும் தங்களின் ஆயுதங்களுடன் ஓடிவந்து வன்னியர்களை வளைத்துக் கொண்டார்கள். இரு தரப்பிலும் சண்டை மூண்டது.

விஷயம் அறிந்த வன்னியர்கள் சபதம் போட்ட நல்லம்மாளையும் மும்முடி நல்ல தம்பியையும் கோபத்துடன் தேடத் தொடங்கினார். கண்ண குலத்தாரும் அவர்களது பங்காளிகளும் அங்கிருந்து தங்கள் திட்டப்படி வெளியேறியதை அறிந்து அவர்கள் சென்ற திசையிலே துரத்திச் சென்றனர்.

வன்னிய ஆட்கள் தங்களை பின் தொடர்ந்து துரத்துவதைக் கண்ட கண்ண குலத்தார் தாங்கள் வந்த பாதையிலே பொற்காசுகளை ஒழுக்கியவாறு சென்றனர். வண்டிகளை துரத்தி வந்த ஆட்கள் பொற்காசுகள் கிடப்பதைக் கண்டு காசுகளை பொறுக்கிக் கொண்டு திசை மாறிப் போனார்கள். இவ்வாறு கண்ண குலத்தார் பொன்னை ஒழுக்கிய இடத்திற்கு பின்னாளில் **பொன் பரப்பி** என்ற பெயரும் ஏற்படலாயிற்று என்பர்.

பொன் பரப்பியிலிருந்து புறப்பட்ட கண்ண குலத்தினர் மூலனூர் எல்லையைக் கடக்கும் போது அவர்கள் வண்டியின் இருசு முறிந்து விட்டது. அதனால் கண்ண குலத்தாரில் சிலரும் 500 கோமாஞ் செட்டிகளும் அங்கேயே தங்கி விடுவது என்று முடிவு செய்து தாங்கள் கூடவே அழைத்து வந்திருந்த சோளீஸ்பரன். வஞ்சியம்மன். செல்லாண்டியம்மன் ஆகிய தெய்வங்களை அங்கேயே எழுந்தருளச் செய்து **சோமன் கோட்டை** என்ற காணி ஏற்படுத்தி அங்கேயே வசிக்கத் தொடங்கினர்.

மற்றவர்கள் மும்முடி நல்ல தம்பியின் தலைமையில் அமராவதி ஆற்றின் கரையை அடைந்தனர். அதனைக் கடக்கும் வேளையில் ஆற்றில் வெள்ளம் பெருகி வந்தது. சபதம் போட்ட நல்லம்மாள் வெள்ளம் தணியுமாறு செல்லாண்டி யம்மனை வேண்டினாள். வெள்ளமும் தணிந்தது.

அமராவதி ஆற்றை கடந்து வாள வந்தனுரை அடைநதனர். அங்கு மீண்டும் வண்டி இருசு முறிந்து விடவே அவர்களில் சிலர் தென்னீஸ்வரர், பெரிய நாயகி, அத்தனூர் அம்மன் ஆகிய தெய்வங்களை அவ்விடத்திலேயே எழுந்தருளச் செய்து அங்கேயே தங்கி விட்டனர்.

அப்போது அமராவதியைக் கடந்து வரும் பொழுது உடை நனையாமல் வந்தவர்கள் **ஆதி நாட்டார்கள்** என்றும் பாதி உடை நனைந்தவர்கள் **ஆதி கண்ணன்** என்றும் முழுவதும் நனைந்தவர்கள் **ஆதி கண்ணந்தை** என்றும் மூன்று குலங்களாக தங்களை பிரித்துக் கொண்டார்கள். ஆதி நாட்டார் அங்கிருந்து வடக்கே சென்று கன்னபுரம் என்று காணி ஏற்ப ஏற்படுத்தி சோழேஸ்பரர், கரிய காளி அம்மன் ஆகிய தெய்வங்களை எழுந்தருளச் செய்து அங்கேயே தங்கிவிட்டனர்.

மற்ற இரு குலத்தினரும் மும்முடி நல்லதம்பி மன்றாடியார் தலைமையில் அங்கிருந்து புறப்பட்டு புங்கங்கரை வழியே நத்தக் காரியுரை சென்றடைந்தனர். அங்கே அக்கூட்டத்தில் இருந்த கர்ப்பிணிப் பெண்ணான **நல்ல தம்பி** மனைவிக்கு சூரிய உதயத்தின் போது ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு **சூரிய காங்கேயன்** என்ற பெயரை இட்டனர். மேலும் அங்கேயே சிலர் தங்கி விட்டனர்.

மற்றவர்கள் மன்றாடியார் தலைமையில் **சூரிய** காங்கேயனை எடுத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு விளக்கேத்தியை அடைந்து அங்கிருந்து எழுமாத்தூர் வழியாக மொடக்குறிச்சியை வந்தடைந்தனர். அவ்வாறு வரும் பொழுது இரவில் ஓரிடத்தில் விளக்கேத்தி தங்கியதால் அவ்விடத்திற்கு **விளக்கேத்தி** என்றும்

குழந்தை சூரிய காங்கேயனுக்கு ஏழுமுறை குளிப்பாட்டி ஏழு மாத்து (துணி) கொடுத்ததால் அவ்விடத்திற்கு **எழுமாத்தூர்** என்றும் ஓரிடத்தில் களைப்பு நீங்க ஓய்வெடுத்ததால் அவ்விடத்திற்கு **மொடக்குறிச்சி** என்றும் பெயர் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

(அம்மானை ஆடிய ஏழுமாதர்கள் ஒரு பூங்காவில் எக்களித்து விளையாடி விட்டு அருகில் உள்ள அநுமநதி - இது இன்று குரங்கன் பள்ளம் என்று அழைக்கப்படுகிறது. தீர்த்தத்தில் நீராடியதால் அங்கே பால் மற்றம் ஏற்பட்டு ஆண் உருவை அடைந்தனர். வீடு சென்றவுடன் கணவன்மார்கள் அவர்களை கடுமையாக கோபித்து கர்ம வினைகள் திரும் வண்ணம் பிராத்தனை செய்து நாவலந்திவு சென்று சத்தீஸ்வரரைப் பூஜித்து வருக என்று கூறி அனுப்பினார்களாம். சத்தீஸ்வரரையும் சர்வவோக நாயகியையும் தொழுது நோன்பு இருக்க மீண்டும் பெண் உருவைப் பெற்றார்களாம். ஏழு மாதர்களின் சாப நிவர்த்தி காரணமாக எழுமாத்தூர் எனப் பெயர் வந்ததாக ஒரு கதை உண்டு.)

மேலும், இங்கு கிடைக்கப் பெற்ற பொற்காசுகள், ஏழு மாத்தை கொண்டிருந்ததால் இதற்கு ஏழுமாத்தூர் எனப் பெயர் வந்ததாக மற்றொரு செவி வழிச் செய்தியும் நிலவுகிறது.

கண்ண குலத்தில் ஒரு பிரிவினர் மொடக் குறிச்சியிலிருந்து புறப்பட்டு நசியனூர், காஞ்சி கேயில் ஐம்பை கற்றாங்காணி ஆகிய இடங்களை சென்றடைந்து குல தெய்வங்களை எழுந்தருளச் செய்து அங்கேயே வசிக்கத் தொடங்கினர்.

மொடக்குறிச்சியிலிருந்து புறப்பட்ட மற்றொரு பிரிவினர் காளமங்கலம், கிளாம்பாடி, கொள நல்லி முதலிய கிராமங்களை அடைந்தனர். காளமங்கலத்தை அடைந்தவர்கள் குல விளக்கு அம்மனையும் கிளாம்பாடியை அடைந்தவர்கள் சொக்க நாச்சி அம்மனையும் கொளா நல்லியை அடைந்தவர்கள் குழலி அம்மனையும் எழுந்தருளச் செய்து அங்கேய தங்கி விட்டனர்.

கண்ண குலத்தினர் வன்னியப் படைகளின் முற்றுகையிலிருந்து தப்பி வந்து காளமங்கலம் கிராமத்தை அடைந்த போது நேரம் விடியற்காலை. அதனால் அவ்வூருக்கு **காலை மங்கலம்** எனப் பெயர் வைத்தனர். இதுவே பின்னாளில் **காளமங்கலம்** என பெயர் ஆயிற்று.

அப்பொழுதும் வன்னியப்படைகள் பின் தொடர்ந்து துரத்தி வருவதைக் கண்ட கண்ண குலத்தினர் காவிரி ஆற்றைக் கடந்து செல்ல முற்பட்டனர். காவிரி வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியதால் கரையின் மேல் தங்கள் குல தெய்வத்தை எழுந்தருளச் செய்து ஆற்றில் வெள்ளம் தணிய அருளுமாறு வேண்டினர்.

அம்மனின் அருளால் ஆற்றில் வெள்ளம் தணிந்து அவர்களுக்கு வழி ஏற்பட காளமங்கலத்திலிருந்து இறைய மங்கலத்தை அடைந்தனர். காவிரியின் மறுகரையில் இறங்கியதால் அவ்வூருக்கு **இறங்கிய மங்கலம்** எனப் பெயரிட்டனர். பின்னாளில் இப்பெயர் **இறையமங்கலம்** என ஆயிற்று. ஆற்றில் வெள்ளம் தணித்து தங்கள் குலம் விளங்கச் செய்த காளமங்கலத்து அம்மனுக்கு **குலவிளக்கு அம்மன்** எனவும் பெயரிட்டனர்.

கண்ண குலத்தினரை தாக்க வந்த வன்னியப் படைகள் காவிரி ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடுவதைக் கண்டு அதனைக் கடக்க வழி இல்லாமல் அங்கேயே நின்று விட்டனர்.

இறையமங்கலத்தை அடைத்தவர்கள் கீழ்க் கரைப் பூந்துறை நாட்டின் பல பகுதிகளில் குறிப்பாக மொளசி மோரூர் ஆகிய ஊர்களில் காணி கொண்டு வாழத் தொடங்கினர். இக்கண்ண குலத்தினர் இன்று இரு பெரும் பிரிவாகக் காணப்படுகின்றனர். அவை. ***மோரூர் வகையறா.*** மற்றும் ***முளசி வகையறா.***

மோரூரை அடைந்த கண்ண குலத்தினர் அங்கே காணி கொண்டு வாழ்ந்த சேர குலத்தைச் சேர்ந்த நல்லைய கவுண்டர்

மகள் வெள்ளைப் பிள்ளையை கன்ன குலத்து முத்துக் கண்டர் மகன் செல்லப்ப கவுண்டருக்கு மணம் செய்வித்து அதற்குச் சீதனமாக மோரூரில் கால்காணி பெற்று அங்கேயே குடியமர்ந்தனர்.

சூரிய காங்கேயன் வளர்ந்து பெரியவன் ஆனதும் அவனுக்கு மோரூரின் முதல் காணியாளராகிய ஆந்தை குலத்து செங்கோட கவுண்டர் மகளை மணம் செய்து வித்தனர். அவருக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. மூத்தவனுக்கு **சூரியன்** என்றே பெயரிட்டு அழைத்தனர்.

குழந்தை பெரியவனாகி தன் தாய் வழிப் பாட்டனாரிடம் (அப்பச்சி) ஆந்தை குலத்தார் அப்போது ஆண்டு கொண்டிருந்த மோரூர் 32 ஊர்களில் கால்க்காணி கேட்டார்கள்.

அதற்கு அவரும் அவரது பங்காளிகளும் மூவேந்தர் முடிசூட்டிக் கொடுத்தத கன்னிவாடிக் காணியையே வன்னியர்களுக்கு தானமிட்டு வந்தவர்களுக்கு மோரூரில் காணியா? என்று மறுத்ததோடு தூர்க்காடும் பறைச்சேரியும் தான் உங்களுக்கு காணி அங்கே வீடு கட்டிக் கொள்ளுங்கள் என்றும் இகழ்ந்தனர். இதனால் மனத்துயரடைந்த சூரிய காங்கேயன் கோபத்துடன் மோரூரிலிருந்து வெளியேறி அந்நாளில் மதுரையை தலைநகராகக் கொண்டு கொங்கு நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த பாண்டிய மன்னனின் படையில் சேவகத்திற்கு சேர்ந்தார்.

அச்சமயம் சேலம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியும் ஆர்க்காடு மாவட்டங்களின் ஒரு பகுதியும் ஆன மகத மண்டலத்தை மகதேசன் என்ற சிறப்புப் பெற்ற வாணாதிராயன் (ஆருகளேழு வாணன் என்ற மன்னன்) ஆண்டு வந்தான். சோழனைத் தோற்கடித்து பாண்டியனை வென்று கம்பீரமான கருடக் கொடியின் கீழ் கொங்கு நாட்டைச் சேர்த்து தனி ஆட்சி செய்து வந்த இவனை முறியடிக்க பாண்டியன் வாணாதிராயன் மீது பத்து முறை படையெடுத்தும் அவனை வெற்றி கொள்ள பாண்டியனால் இயலவில்லை.

இந்நிலையில், பாண்டியன் மோரூர் சூரிய காங்கேயனை அழைத்து பெரும் படை ஒன்றைக் கொடுத்து வாணாதிராயனை வென்று வெற்றி வாகை சூடி வா என அனுப்பினான்.

சூரிய காங்கேயன் தனது படைகளுடன் புறப்பட்டுச் சென்று வாணாதிராயனின் கோட்டைக்கு அருகாமையில் நெருங்கி அங்கே தனது படைகளை ஓரிடத்தில் மறைத்து வைத்தான். பிறகு, வானதிராயனை உயிரோடு சிறைப்பிடிக்க திட்டம் ஒன்றை வகுத்தான்.

அதன்படி, அழகிய உள்ளூர் தாசிப் பெண்களை அழைத்து அவர்களுக்கு பொற்காசுகள் கொடுத்து வாணாதிராயனின் கோட்டைக்கு அருகே வீடு கட்டிக் கொண்டு அதில் குடியேறி சேனைத் தளபதிகளையும் வீரர்களையும் ஆடல் பாடல் செய்து வசப்படுத்தி வையுங்கள் என்று கூறி அனப்பி வைத்தான்.

அவ்வாறே தாசிப் பெண்கள் வெள்ளி அன்று சுவாமிக்கு பொங்கல் வைக்கிறோம் என்று படைத் தளபதிகளையும் வீரர்களையும் வீட்டிலேயே தங்க வைத்துக் கொண்டனர்

அப்பொழுது சூரிய காங்கேயன் மறைத்து வைத்திருந்த தனது படைகளுடன் சென்று வாணாதிராயனின் கோட்டையைத் தகர்த்து வீரர்களைக் கொன்று வாணாதிராயனை உயிருடன் சிறைப்பிடித்து வந்து பாண்டியன் முன் நிறுத்தினான். இதனை,

***மீண்டாறை வாணனைமுன் வெட்டாமற் பாண்டியனோ***
***கொண்டு வந்து நிற்கவிட்ட கொற்றவனு நீயிலையோ***
***தெண்டிறைசேர் மோரூர்த் தென்னன் மகுடாசலேனே***
***மண்டலிகர் தோத்துமெச்ச வாழ்சூரிய காங்கேயனே.***

***பூதத்துணை கொண்ட போவானன் மாறனிரு***
***பாதத் துணைகாணப் பன்னினோர் – ஏதுமிசை***
***ராமாயனங் கேட்டோர் நுவலர்வைப் புப்பொருளாங்***
***கோமான் வாழ்மோரூர் குடி.***

என சூரிய காங்கேயனின் மெய்க் கீர்த்திப் பாடல்கள் போற்றுகின்றன.

போரில் வெற்றி கண்ட பாண்டியன் மகிழ்ந்து சூரிய காங்கேயனைப் பாராட்டி சிங்முகப் பல்லாக்கு, சூரிய பாணம், வெண் சாமரை, வெள்ளைக் குடை முதலிய ராஜ விருதுகள் கொடுத்து **சூரிய காங்கேய மன்றாடி** என்ற பட்டமும் வழங்கி வேப்பமாலை சூடி மீனக் கொடி அளித்து மோரூர் நாட்டுக்கு முடி சூட்டி வைத்தான்.

மோரூர் நாட்டுக்கு அரசனான சூரிய காங்கேயன் தன்னை அவமதித்த ஆந்தை குலத்தாரை மோரூர் நாட்டிலிருந்து விரட்டியதோடு அவர்களின் தெய்வங் களையும் ஆலயங்களையும் உடைத்தெறிந்து மேடு பள்ளம் மேவி தகடப்பாடி ஆனங்கூர் ஆகிய ஊர்களை ஏற்படுத்தினான். அங்கே நல்ல நாயகி அம்மனையும் காரிகுல நாதக்கவுண்டர் கொண்டு வந்திருந்த கரிய காளி அம்மனையும் எழுந்தருளச் செய்தான்.

***ஆரியர் புகழும் சூரிய காங்கேயன்*** எனப் பின்னாளில் போற்றப்பட்ட சூரிய காங்கேயனது மெய்க்கீர்த்தியை கொங்கு மண்டலச் சதகம் இவ்வாறு போற்றுகின்றது.

***ஏய்ப்பொடு மீறு மொருவாணன் கொட்ட மெலா மடக்கக்***
***கோப்பெரு மானா கவராம பாண்டியக் கோனேனவே***
***வேப்பமலர் மாலையும் மீனப் பாதகை விருது மற்றும்***
***வாய்ப்புட வீயப் பெறுசூ ரியன் கொங்கு மண்டலமே. (88)***

***வில்லான ராகிய மூவேந்தர் போரில் வினைமுகத்து***
***நில்லாதகன்றிடச் செய் ஆறை வாண நிருபதியைக்***
***கொணர்ந்து***
***கொல்லாது பற்றிஅப் பாண்டியன் முன்னம்***
***கொணர்ந்து விட்ட***
***வில்லாண்மை மீறிய சூரிய னுங்கொங்கு மண்டலமே. (54)***

இந்நிலையில், கன்னிவாடி மீண்டும் வேட்டுவர்களால் தாக்கப்பட்டது. அதுவரை கன்னிவாடியைக் காத்து வந்த ஆண்டி, நாவிதன், பறையன் ஆகிய மூவரும் மோரூர் வந்து சூரிய காங்கேயனைக் கண்டு முன்பு தங்கள் முன்னோர்களால் இழக்கப்பட்ட கன்னிவாடிக்கு வந்து அரசாட்சி புரிய வேண்டினர்.

அதற்கு சூரிய காங்கேயன் நமக்கு இங்கே மோரூரில் 32 கிராமம் இருக்கின்றது. அதனால் நல்லநாயகி அம்மனுக்கு பணிவிடை செய்து கொண்டு இங்கேயே இருந்து விடுங்கள் என்று அவர்களை மோரூரிலேயே தங்க வைத்துக் கொண்டார்.

ஒருநாள், மோரூர் கண்ணகுல நல்லையை கவுண்டர் மகன் முத்துக் கவுண்டர் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் போது ஆண்டி, நாவிதன், பறையன் ஆகிய மூவரும் அவரை அழைத்துக் கொண்டு காளமங்கலம்

சென்று அங்கே கண்ணகுலத்து ஆயிக்கவுண்டரைக் கண்டு கன்னிவாடியை அரசாட்சி செய்ய முத்துக் கவுண்டரை அழைத்துச் செல்கிறோம். இச்செய்தியை மோரூருக்குத் தெரியப் படுத்தி விடுங்கள் என்று கூறி விட்டு கன்னிவாடி சென்றடைந்தனர்.

இந்த முத்துக்கவுண்டருக்கு மூலனூர் பூச குலத்தில் சந்திராயி என்பவளை மணம் முடித்து வைத்தனர். இவர்கட்கு பிள்ளைப் பேறு வாய்க்காமல் போகவே மணலூர்வெண்டுவன் குலத்தைச் சேர்ந்த வேலம்மாள் என்ற பெண்ணை மறுதிருமணம் செய்து வைத்தனர். இத் தம்பதிகளுக்கும் பிள்ளைப் பேறு வாய்க்காமல் போகவே மீண்டும் வெள்ளகோயில் ஆந்தை குல காளியம்மாளை முத்துக் கவுண்டருக்கு மூன்றாம் தாரமாக திருமணம் செய்து வித்தனர் துரதி டமாக இவர்களுக்கும் குழந்தைப் பாக்கியம் கிட்டவில்லை.

மூன்று மனைவிகளை மணந்தும் பிள்ளை இல்லாமல் போகவே முத்துக் கவுண்டர் சிரங்கம் போய் தவமிருந்து வந்த பிறகு ஆந்தை குலத்து காளியம்மாள் சிரங்கராயன். என்ற **ஆண்குழந்தையையும்** வெண்டுவன் **குலத்து** வேலம்மாள் சிராயி என்ற பெண் குழந்தையையும் ஈன்றெடுத்தார்கள். இதனால் முத்துக்கவுண்டர் இவ்வட்டாரத்தில் திருமாலுக்கு பல கோயில்கள் எழுப்பியுள்ளார்.

இதற்கு பிறகு முத்துக் கவுண்டர் தனது மூன்று மனைவிமார்கள் குழந்தைகள்மற்றும் நாவிதன் ஆண்டி பறையன் ஆகியோரையும் அழைத்துக் கொண்டு தனது பெற்றோரைக் காண மோரூர் வந்தார். அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்ற சூரிய காங்கேயன் எல்லா விபரங்களையும் தெரிந்து கொண்டு இத்தனை காரியங்களையும் செய்வித்த நாவித நல்லானைப் பாராட்டி மோரூரில் வசிக்கும் தனது பங்காளிகள் மாமன் மைத்துனன்மார்கள் ஆகியோரை அழைத்து வந்து காளமங்கலத்திலிருந்து ஆயிக் கவுண்டரையும் வரவழைத்து அவர் தலைமையில் நாவிதனுக்கு ***61ஆம் காங்கேயன்*** என்ற விருது கொடுத்து பல்வேறு பரிசுகள் வழங்கி அதற்கு அடையாளமாக செப்பேடு வெட்டித் தந்தான்.

முத்துக் கவுண்டர் இறந்த பிறகு அவரது மூன்று மனைவிகளும் தீக்குளித்து உயிர் நீத்தனர். அந்த மூன்று கற்புக்கரசிகளையும் **வீரமாத்தி** ஆக்கி கோயில் கட்டி வழிபட்டு வருகின்றனர் கண்ண குலத்தினர்.

# கொளா நல்லி கண்ணகுலம்

ஆய்ந்தமிழ் கூறும் குழாநிலை என்று பூந்துறை புராணம் புகழும் கொளாநல்லி கண்ண குலத்தாரின் மூன்றாவது காணியூராகும். பூந்துறை நாட்டு 32 ஊர்களில் பத்தாவதாகக் குறிக்கப்பெறும் இவ்வூரின் பழம் பெயர் குழாம்நிலை என்பதாகும். இவ்வூரின் முதல்க் காணியாளராகிய குழாயர் குலத்தில் பிறந்த வெள்ளைப் பிள்ளையை கண்ண குலத்தவர் திருமணம் செய்து அதற்கு சீதனமாக கோயில் உரிமையில் காணி பெற்றதாகக் கூறப்படுகிறது.

இங்கு காணி கொண்டுள்ள கண்ண குலத்தாரின் குலதெய்வம் பொன் 'குழலி அம்மன்' என்பதாகும். முன்பு, இவ்வம்மன் ஆலயத்தை ஒட்டி பெரிய குளம் ஒன்று இருந்துள்ளது. இக்குளத்தருகே நிலைகொண்ட - எழுந்தருளியுள்ள அம்மனை குளத்துநிலை அம்மன் என அழைத்துள்ளனர். பின்பு, இப்பெயர் திரிந்து குளாநிலை அம்மன் என அழைக்கப்பட்டு பின்னர் இப்பெயரும் மருவி குழலி அம்மன் என வழங்கப்படலாயிற்று. இதனாலேயே இவ்வூருக்கும் குழாநிலை என்ற பெயர் வழங்கப்பெற்றது. வரலாற்று சாசனங்கள் கொளாநல்லியை குழாநிலை என்றே குறிக்கின்றன.

கொளாநல்லி கண்ணரில் ஒரு பிரிவினர் மலையாத்தாள் சுவாமியைக் குல நாயகியாகக் கொண்டு ஒரு படைக்கலம் எடுத்து ஒரு குதிரை பிடித்து சாமி செய்தல் சீர் நடத்துகின்றனர். தற்போது இச்சடங்கும் நிகழ்த்தும் வழக்கம் மிகவும் குறைந்துவிட்டது. அருமை சீர் செய்து கொள்பவர்கள் மட்டுமே இச்சீரினை செய்கின்றனர். மற்றவர்கள் இவ்வழக்கத்தை கைவிட்டு விட்டனர். கண்ண குல பெருமக்களின் ஒரு பிரிவினரிடையே சாமி செய்தல் சீர் தொன்று தொட்டு வழக்கில் இருந்து வருகிறது. இது கண்ண குலப் பெருமக்களின் கற்புக்கு சிறந்த ஆதாரம் ஆகும்.

கணவன் இறந்தவுடன் பெண்கள் தீக்குளிக்கும் வழக்கம் கண்ண குலத்தில் இருந்திருப்பதை நல்லாத்தாள், மலையாத்தாள், வீரமாத்தி ஆலயங்கள் மெய்ப்பிக்கின்றன. தீப்புகும் பெண்கள் சகலமேள தாளங்கள் முழங்க பூசைகள் பெற்று அக்னி புகுவர். அந்த அஸ்திகளின் மீது நினைவுச் சின்னம் எழுப்பப்படும். உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிந்தவுடன் இவை நிறுத்தப்பட்டன.

அக்னி புகுவது குதிரை பிடித்தல் என்றும் நினைவுச் சின்னம் எழுப்புவது ***படைக்கலம்*** என்றும் வழங்கப்பெறும். இயற்கை எய்திய கணவனை புதைத்த இடம் 'பள்ளிமடை' எனப்படும். தீக்குளித்த பெண் உடுத்தியிருந்த புடவையை பேழையில் வைத்து செய்யப்படும் வழிபாட்டிற்கு 'புடவை மாற்று நோன்பு' என்று பெயர்.

## சமயப் பணி

கொளாநல்லி கண்ண குலத்தினர் *சீரிய சமயப்பணி* புரிந்துள்ளனர். இதனை பல கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன.

## வெள்ளோட்டுக் கல்வெட்டு

உம்மத்தூர் தலைவன் வீரநஞ்சராயன் காலத்தில் பூந்துறை நாட்டவர் வெள்ளோடு சர்வலிங்கேசுவரன் ஆலயத்திற்கு அளித்த கொடையை இக்கோயிலின் வடக்குச் சுவரில் உள்ள கல்வெட்டு கூறுகிறது. இதில் கையொப்பமிட்ட பெருமக்களில்,

இப்படிக்கு குழாநிலையில் வெள்ளாழன்
கண்ணர்களில் செம்பியன் எழுத்து

என்ற செய்தி அறியப்படுகிறது.

## ஈரோட்டுக் கல்வெட்டு

ஈரோடு பெருமாள் கோயிலில் உள்ள வீரசிக்கராயன் காலத்துக் (கி.பி.1500-12) கல்வெட்டில்,

குழாநிலை - பெத்தாக் கவுண்டர்என்ற கொளாநல்லி கன்ன குலப் பெருமகன் கையெழுத்திட்டுள்ளார்.

## கொளாநல்லிக் கல்வெட்டு

கொளாநல்லி பாம்பலங்காரர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் கன்ன குலத்தாரின் பெருமையைக் கூறுவன.

சொஸ்தி ஸ்ரீ சாலியவாகன சகாத்தம் 1750 கலியுக சகாத்தம் 4929க்கு மேல் செல்லாநின்ற சறுவதாரி வருஷம் தை மாதம் 5 ஆம் தேதி சோம வாரமும் அஷ்டமியும் அசுபதி நட்சத்திரமும் கூடிய சித்தயோகமும் பவகரணமும் பெத்த சுபதினத்தில் அத்தப்பன் பாளையத்திலிருக்கும் கன்னகுல கோத்திரம் எளயாக் கவுண்டர் மகன் அத்தப்பக்கவுண்டர் செங்கோடகவுண்டர் மகன் பொய்ங்காங்கவுண்டர் பெண்சாதி கூறை குல கோத்திரம் பொய்ங்காக் கவுண்டச்சி சுவாமி அம்மன், கெறப்க் கிரகம் சுப்ரமணியர் உபயம். பொன்குழலி அம்மன் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் கன்னகுலத்தினர் தங்கள் குலதெய்வ ஆலயத்திற்கு செய்துள்ள திருப்பணிகளைத் தெரிவிக்கின்றன.

அம்மன் ஆலயத்தில் முன்பு துலுக்கண சுவாமி எழுந்தருளியிருந்த சபா மண்டபத்தை கி.பி.1834 ஆம் ஆண்டு கன்ன குல கோத்திரமாகிய குடிகள் நல்ல குட்டியாக் கவுண்டர் மகன் நல்லாக்கவுண்டர் சின்னத்தாயம்ம கவுண்டர் மகன் வெள்ளகவுண்டர், பெருமாகவுண்டர்சின்னக் கவுண்டர் மகன் துலுக்கண கவுண்டர், வீரமலையப்பகவுண்டர் மகன் அல்லாளியப்ப கவுண்டர் சின்னைய கவுண்டர் மகன் குமரகவுண்டர் ஆகியோர் கட்டுவித்தனர். இதனை அம்மண்டபத்தின் கிழக்குப் பக்கச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு கூறுகிறது.

சபா மண்டபத்திலுள்ள தூண் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு, கன்னகுல குடியாகிய செல்லகுமன் என்பவன் மனைவி பெரியம்மாள் குழலி அம்மன் ஆலயத்திற்கு தூண் செய்து உபயம் அளித்தார் என்ற செய்தியைத் தெரிவிக்கின்றது.

அம்மன் ஆலயத்தின் மகா மண்டபத்தை கி.பி.182ல் கண்ணகுலத்துச் சீரங்கக்கவுண்டர் மகன் பெருமாக்கவுண்டர் மகன் திருமலைக்கவுண்டர் மகன் மணியகாரர் சின்னையகவுண்டர் மகன் திருமலைக்கவுண்டர் கட்டுவித்தார் என்று ஆலயத்திலுள்ள மற்றொரு கல்வெட்டு கூறுகிறது. இச்செய்தியினைத் தெரிவிக்கும் இக்கல்வெட்டு சிவமயம் என்று தொடங்கி இராமஜெயம் என்று முடிகிறது.

## இளைய பெருமாள் மலை:-

சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் விட்டம்பம் பாளையம் அருகே மலைமீது எழுந்தருளியுள்ள (இளைய பெருமாள் மலை) பெருமாளுக்கு மலைமேல் செல்லும் வழியில் பக்தர்கள் ஓய்வெடுத்து இளைப்பாறிச் செல்ல கல் மண்டபம் நிறுவியுள்ளனர். இதற்கு இளைப்பாறி மண்டபம் என்று பெயர்.

மேலும், மலை அடிவாரத்தில் தற்போது சிமெண்ட் கூரையினால் வேயப்பட்ட மடம் ஒன்றை நிறுவியுள்ளனர். விழா, உற்சவ காலங்களில் இங்கு வந்து 3 நாட்கள் தங்கி அன்னதானம் செய்கின்றனர். விழாவின் போது விட்டப்பம்பாளையம் ஜமீன் அவர்கள் முன்னிலையில் வயது வேறுபாடு இன்றி சிறுவர் முதல் பெரியவர் வரை உள்ள அனைத்து கன்ரன குலப் பெருமக்களுக்கு பட்டம், பரிவட்டம் கட்டி சிறப்புச் செய்வது மிகவும் குறிப்பிடத்தக்கது.

இவை, தவிர மலை அடிவாரத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து, மலைக்கு குழாய் வழியாக மோட்டார் மூலம் மலை உச்சிக்கு நீர் கொண்டு செல்லும் அரிய திருப்பணியை கொளாநல்லி கன்ன குலப் பெருமகன் குட்டப்பாளையம் K.P.சுப்பண கவுண்டர் குமாரர்கள் செய்துள்ளனர். இதனை அங்குள்ள கல்வெட்டு செய்தி தெரிவிக்கின்றது.

## சென்னிமலை:-

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி எழுந்தருளியுள்ள கொங்கேழு மலைகளுள் ஒன்றான சென்னிமலையின் அடிவாரத்தில் கொளாநல்லி கண்ண குலத்தினரின் சமய மடம் ஒன்று உள்ளது. இதனை, கொளாநல்லி மண்டபம் என அழைப்பர். இம்மடத்தில் தினந்தோறும் சென்னிமலை முருகனுக்கு ஒரு கால பூஜை வழிபாடு நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதமும் கிருத்திகை தினத்தன்று கொளா நல்லி கண்ண குலத்தினர் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பால்குடம் எடுத்துச் சென்று முருகனை வழிபட்டு வருகின்றனர்.

## கொடுமுடி மகுடேஸ்வரர் ஆலயம்:-

கொங்கு நாட்டு புகழ் பெற்ற திருத்தலங்களுள் ஒன்றான திருப்பாண்டிக் கொடுமுடி என தேவாரப் பாடல் போற்றும் கொடுமுடியில் சிவபெருமான் மகுடேஸ்வரராக எழுந்தருளியுள்ளார். இவ்வாலயத்தில் ஆண்டிற்கு ஒரு முறை சிவபெருமானுக்கு மிக உகந்த நாளாகக் கருதப்பெறும் மாசிமாதம் மஹாசிவராத்திரி தினத்தன்று கொளாநல்லி கண்ண குலத்தினர் அன்று இரவு சிவபெருமானுக்கு மூன்றாம் கால பூஜை நடத்தி சிறப்பு வழிபாடு செய்கின்றனர்.

## மேழிப்பள்ளி அண்ணமார் கோவில்

இங்கு விழாவின் போது தேங்காய் உடைக்கும் 7 காணியாளர்களில் கொளாநல்லி கண்ண குலத்தினர்களுக்கும் ஒரு பங்கு உண்டு.

## பாசூர் செப்பேடு

கண்டீரவ நரசராயர் சீரங்கப் பட்டிணத்தில் ஆட்சி புரியும் போது மேல் கரைப் பூந்துறை நாட்டில் உள்ள பேரோட்டில் வசித்து வந்த கொங்கு வேளாளர்களின் குல குருவாகிய ஞான சிவாச்சாரியார் இம்முடி அகிலாண்ட தீட்சிதர் அவர்கட்கு கொங்கு வேளாளர்களில் பூந்துறை நாட்டவர் பலரும் குறிப்பாக கொளாநல்லி கண்ண குலத்தினர் மற்றும் குழாய குலத்தினர் அவரை தங்கள் குலகுருவாக ஏற்றுக் கொண்டு உடல், உயிர், பொருள் ஆகியவற்றை குருபாதத்திற்கு காணிக்கை ஆக்கித் தந்ததை இச்செப்பேடு குறிக்கின்றது.

மேற்குறிப்பிட்ட நாட்டைச் சேர்ந்தவர்கள் குடிபெயர்ந்து எந்த நாட்டிலே எந்த ஊரிலே வசித்து வந்தாலும் தலைக்கட்டுக்கு 5 பணம் குருக்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும் குரு சுவாமியர் சஞ்சாரம் வரும்போது சஞ்சாரக் காணிக்கை கொடுக்க வேண்டும் என்றும் சுவாமியார் ஆணைப்படி நடக்க வேண்டும் என்றும் எழுதிக் கொடுத்துள்ளனர்.

மேலும், வாரிசு இல்லாத சொத்து மடத்துக்கு உரியது என்றும் காணி பெற்று அதிகாரத்துடன் வாழ்ந்தாலும் பிறரிடம் பணி பரிந்தாலும் சுவாமிகளுக்கு உரிய கடமைகளை தவறாமல் செய்வோம் என்றும் எழுதிக் கொடுத்துள்ளனர்.

பூந்துறை புஷ்பவனேசுவர் பாகம் பிரியாள் சந்நிதியில் எழுதிக் கொடுக்கப்பட்ட இச் செப்பேட்டின் இறுதியில் பல ஊர்களையும் பல குலங்களையும் சேர்ந்த கொங்கு வேளாண் பெருமக்கள் கையொப்பமிட்டுள்ளனர். அதில் கொளாநல்லி கண்ணகுலம் சார்பில் பெரிய கொமராக்கவுண்டர் குப்பகவுண்டர் பெரிய குமாரகவுண்டர், முத்துரங்க கவுண்டர், திருமலை ராயக்கவுண்டர், குப்பணகவுண்டர், வெள்ளைக் கவுண்டர், சின்ன பொங்காளிக் கவுண்டர் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். ஆனால், தற்போது நடைமுறையில் கொளாநல்லி கண்ண குலத்தினரின் குல குருவாக ஸ்ரீலஸ்ரீ மஹாசன்னிதானம் அருணகிரி இம்முடி சிற்றம்பலம் மடம் அய்யம்பாளையம் அவர்கள் இருந்து வருகிறார்.

### காணி ஊர்கள்

கொளாநல்லி கண்ண குலத்தினர், பெரியார் மாவட்டம் ஈரோடு வட்டம் - கொளாநல்லிக் கிராமம் அணைக்கவுண்டன்புதூர், துண்டுக்காட்டூர், நத்தக் காட்டூர், சுக்கிரமணியம்பாளையம் நடுப்பாளையம், வெள்ளோட்டம் பரப்பு அரிக்காரன் காட்டூர், வேலப்பம்பாளையம், பெரியூர், சானாம்புதூர், கொளாநல்லி, சின்ன மற்றும் பெரிய செம்மாண்டபம் பாளையம் ஆட்டுக்காரன் புதூர், வீரப்பகவுண்டன் காட்டூர் குள்ளக்கவுண்டன் புதூர், வடுக்னூர், தேவம் பாளையம், வெள்ளியம்பாளையம், செல்வ விநாயகம் புதூர், திட்டுக்காட்டூர் கொந்தளம் கிராமம் பெரும்பரப்பு, கொளத்துப்பாளையம் கிராமம் கருக்கம்பாளையம், ஈரோடு, பெருந்துறை வட்டம் செம்பூத்தாம்பாளையம்,

காலத்தான் பாளையம், எருமைக்காரன் பாளையம், செங்கப்பள்ளி, கொடியாம்பாளையம்.

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு கொத்தமங்கலம், அரசம்பாளையம், அய்யம்பாளையம், பாகம் பாளையம், செட்டியாம் பாளையம், கொண்டாங்காடு, கங்கராபாளையம், சாயக்காடு, வில்லிபாளையம்; தேவிபாளையம், கூத்தாநத்தம், கோணாங்காடு, நாமக்கல், செலமகவுண்டன் பாளையம், கபிலர்மலை, திடுமல், காளப்ப நாயக்கன்பட்டி, கத்தேரி, சாமிபாளையம், வளைய செட்டி பாளையம்.

திருச்சி மாவட்டம், மாலைக்கோவில், குக்கல்பட்டி, பூமகவுண்டன்வலசு, கரூர், வெள்ளியம்பாளையம், வளையாபாளையம், குப்பம், நாகம்பள்ளி, வெங்கடாபுரம்.

திண்டுக்கல் அண்ணா மாவட்டம் ஒட்டன்சத்திரம் தங்கச்சி மாபட்டி, ஆத்தூர். ஆகிய ஊர்களில் காணி கொண்டு சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

## காணித் தெய்வங்கள்

கொளாநல்லி காணியாளர்களான குழாயர், கன்னர் குலத்தினர்களின் குல தெய்வம் அருள்மிகு பொன் குழலி அம்மன் ஆகும். மேலும், பாம்பலங்கார ஈஸ்வரர், பங்கஜ வல்லி அம்மை, வரதராஜப் பெருமாள், கோட்டை மாரியம்மன், சின்னக் குழலி அம்மன், துலுக்கண சுவாமி, அண்ணமார் சுவாமி, விநாயகர், கல்யாண சுப்பிரமணியர் ஆகியவைகளும் காணித் தெய்வங்களாக விளங்குகின்றன.

## பொன் குழலி அம்மன்

தாய்த் தெய்வ வழிபாடு தமிழர்களின் உயரிய பண்பாடு. பேசும் மொழியையும் வாழும் நாட்டையும் தமிழர்கள் தங்கள் தாய்க்கு ஒப்பாக உருவகப் படுத்தி தாய்நாடு என்று போற்றி மகிழ்ந்தனர். சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் நாகரிகமாகக் கருதப்படுகின்ற சிந்து சமவெளி நாகரிகத்திலும் தாய்த்தெய்வ வழிபாடு இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

தமிழகத்தில் மற்றைய கோயில்களை விட அம்மன் கோயில்களே மிகுதியாக உள்ளன. இதற்குக் காரணம் தமிழர்களின் தாய்மைக்கு முதலிடம் கொடுத்ததேயாகும். ஆரியர்களின் வரவும் உறவும் நேர்ந்த பின்னரே தந்தை வழித் தலைமுறைக்கு மாறினர். தாய் வழித் தலைமுறையை அவர்கள் போற்றிய காலத்தில் தாய் வணக்கத்தையே மேற்கொண்டிருந்தனர். அதனாலேயே ஊர்கள் தோறும் அம்மன் கோயில் எழுப்பினர்.

சங்க இலக்கியங்களிலும், காடுகாள், காடுகிழாள், காடுகொழு செல்வி, கடமார் செல்வி, கொற்றவை போன்ற தாய்த் தெய்வங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. முற்கால கல்வெட்டுக்களிலும், பிடாரி, படாரி போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் காளி, துர்க்கை போன்ற பெயர்கள் வழங்கின.

கொங்கு வேளா சமுதாயத்தில் ஆண் தெய்வங்களைக் காட்டிலும் பெண் தெய்வங்களின் வழிபாடே மிகுந்து காணப்படுகின்றன. அவற்றில் சில அம்மன் தெய்வங்களின் பெயர்கள் ஊர்ப்பெயர் இடப்பட்டும் சிறப்புப் பெயர் இடப்பட்டும் அழைக்கப்பெறுகின்றன.

## தேர்த்திருவிழா

தின வழிபாட்டில் ஏற்படும் குறையை நீக்க ஆண்டுக்கு ஒருமுறை திருவிழாவும் திருவிழாவில் ஏற்படும் குறையை நீக்க குட முழுக்கு விழாவும் செய்வது இந்துமத மரபு.

இந்த வகையில் பொன் குழலி அம்மன் தேர்த்திருவிழா ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் உத்திர நட்சத்திர தினத்தை உள்ளடக்கி செவ்வாய்கிழமை அன்று தொடங்கி 10 நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

இவ்விழாவில், பூச்சாட்டு, கிராம சாந்தி காப்புக் கட்டுதல், அம்மை அழைத்தல், முப்பாடு மாவிளக்கு, படைக்கலம், குதிரை துலுக்குப் பிடித்தல், பொங்கல் தேர் உலா ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகள் உள்ளடங்கியிருக்கும்.

## திருப்பணி

அருள்மிகு பொன்குழலி அம்மன் ஆலயம் அமைக்கப்பட்ட பிறகு பல்வேறு கால கட்டங்களிலும் அதற்கு பல்வேறு திருப்பணிகளை அக்கோயிலின் காணியாளர்கள் செய்துள்ளனர். இதனை, அக்கோயிலின் கண் உள்ள கல்வெட்டுக்கள் பலவும் உறுதிப் படுத்துகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன் ரூ.30 லட்சம் திட்ட மதிப்பீட்டில் தொடங்கப் பெற்ற ஆலயத்திருப்பணி அண்மையில் நிறைவுற்று, பொன் குழலி அம்மன், விநாயகர் மற்றும் அம்மனின் பரிவார தேவதைகளுக்கு ஸ்வஸ்தி ஸ்ரீ யுவ வருடம் ஆவணி மாதம் 15ஆம் நாள் 31.8.1995 வியாழக் கிழமை வளர்பிறை சஷ்டி திதி சுவாதி நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபதினத்தில் அன்று காலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் துலா லக்கினத்தில் திருக்குடமுழுக்கு நீராட்டு விழா (அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்) மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

# குழாயர் குலம்

ஆண்மக்கள் தங்கள் காதுகளில் அணியும் நகைக்கு குழை என்று பெயர். இதனை, **குண்டலம்** என்றும் அழைப்பர். படைத்தலைவர்களும் அரசர்களும் குண்டலம் அணிந்து கொள்வது அக்கால வழக்கம். குழை என்னும் குண்டலத்தை அணிந்தவனை குலமுதல்வனாகக் கொண்ட குடிகளுக்கு **குழாயர் கூட்டம்** என்ற பெயர் ஏற்பட்டது. **குழையர், குழாயர்** என்ற இரு சொற்களும் ஒரே பொருளையே தரும்.

குருத்தணிச் சோழன் தனது மகள் உருத்திரமணி என்பவளை தாராபுரம் சேர மன்னனுக்கு மணம் முடித்து கொடுத்தான். அதற்கு சீதனமாக சோழ நாட்டிலிருந்து 8000 குடும்பங்களைச் சேர்ந்த வேளாளர் குடிகளை வேளிர் முத்தையன் தலைமையில் கொங்கு நாட்டிற்குள் அனுப்பி வைத்தான்.

கொங்கு நாட்டில் குடியேறிய வேளாளர்கள் தங்களை குல கோத்திரம் பிரித்துக் கொண்டு குலங்களுக்குரிய காணிகளும் காணிகளுக்குரிய தெய்வங்களும் படைத்துக் கொண்டனர். சேர மன்னன் ஆதரவில் கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டின் பல பகுதிகளில் குடியேறி நாட்டை வளமாக்கி செழிக்கச் செய்தனர்.

இந்த வகையில் கொங்கு வேளாளரில் குழாய குலத்தினர் குழித்தலை வட்டாரம் கோவிலூர் பகுதியில் முதலில் காணி கொண்டனர். இவர்களை கோவிலூர் குழையர் என ஓதாளர் அலகுமலைக் குறவஞ்சி என்ற இலக்கியம் குறிப்பிடுகின்றது. இவர்களில் ஒரு பிரிவினர் பூந்துறை நாட்டு கொளாநல்லிக்கு நாளடைவில் குடிபெயர்த்தனர். அவர்களிலும் பலர் போரின் காரணமாக திருப்பூர் பகுதிகளுக்கு குடிபெயர்ந்து அங்கேயே நிலை அமர்ந்து விட எஞ்சிய சிலர் மட்டுமே கொளா நல்லிக்கு அருகே உள்ள வழுகனூர் என்ற கிராமத்தில் காணி கொண்டு பொன்குழலி அம்மனை குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களே கொளா நல்லியின் முதல்க் காணியாளராகக் கருதப்படுகின்றனர். இதற்கு சான்றாக, கொளாநல்லியின் பழைய பெயர் குழாநிலை என்றும் குழாம்நிலை என்றும் வரலாற்று சாசனங்கள் குறிப்பிடுகின்றன. எடுத்துக்காட்டாக, பூந்துறை புராணம் **'ஆய்ந்தமிழ் கூறும் குழாநிலை'** என்று குறிப்பிடுகிறது. அவ்வாறே, வெள்ளோடு சர்வலிங்கேசுவரன் கோயிலிலும், ஈரோடு பெருமாள் கோயிலிலும் உள்ள கொளாநல்லி கண்ண குலத்தாரின் திருப்பணி செய்தியைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் கொளா நல்லியை 'குழாநிலை' என்றே குறிப்பிடுகின்றன. பின்னரே, இப்பெயர் கொளாநல்லி என்று வழங்கப்படலாயிற்று என்று அதற்கான காரணத்தை முன் அத்தியாயத்தில் கண்டோம். குழாயர்கள் இங்கு முதலில் காணி கொண்டதால் இவ்வூருக்கு குழாநிலை என்ற பெயரும், இங்கு எழுந்தருளியுள்ள அம்மனுக்கு **'குழலி அம்மன்'** என்ற பெயரும் ஏற்படலாயிற்று என நம்பலாம்.

இக் குழாய குலத்தினர் குரங்கன் பள்ளன் என அழைக்கப்பெறும் அநுமநதியில் பழமங்கலத்திற்கும் கொளாநல்லிக்கும் இடைப்பட்ட பகுதியில் பொறம்பு கட்டி மண்

குழாய் அமைத்து நீரை மேட்டிற்கு ஏற்றி அதனை கொளாநல்லி குளத்திற்கு பாயச் செய்து வேளாண்மை செய்துள்ளனர். அவர்கள் அன்று அமைத்த மண் குழாய்கள் இன்றும் அப்பகுதியில் காணக் கிடைக்கின்றன.

குழாயர்கள் முன்பு படைபலம் மிகுந்த பெரும் காணியாளர்களாக கீர்த்தியுடன் வாழ்ந்துள்ளனர் என்பதை வரலாறு மெய்ப்பிக்கின்றது. இவர்களின் தலைவன் குமார ரத்தினமால் என்பவன் ஆவான்.

சோழ நாட்டிலிருந்து கொங்கு குடிகளாக வந்த வேளாளர் சேர மன்னன் தனக்கு சரி நிகராகப் பெருமைப் படுத்தி வளமுடன் வாழ வழிவகை செய்தான். மேலும், வேளாளர் கையினால் முடி சூட்டிக்கொள்ளவும் செய்தான். இதனால், கொங்கு நாட்டின் பழங்குடி மக்களான மாவிலியர், காவிலியர், முழுவர், செழுவர், வேட்டுவர் ஆகிய அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து சேர மன்னனுக்கு வரி கொடாமல் எதிர்த்து கலகம் செய்தனர். அத்தோடு, வேளாளர்களை தாக்கவும் செய்தனர்.

சேரனால் இவர்களை கட்டுப்படுத்த முடியாமல் போகவே தனது மாமன் குருத்தணிச் சோழனுக்கு நிலைமையை தெரியப்படுத்தினான். சோழ மன்னன் வஞ்சிபுரிநாட்டு சிற்றரசன் ஒதாள குலத்து பெரிய பெருமாள் தலைமையில் பெரும்படை ஒன்றை திரட்டி அனுப்பி வைத்தான்.

சோழ மன்னனின் படைகளோடு புறப்பட்ட பெரிய பெருமாள் வழியில் கடம்பபுரியை ஆளும் பொன்னர் குல தலைவன் பெரியண்ணர்மால், கோவிலூரை ஆண்ட குழாய குலத் தலைவன் குமார ரத்தினமால், ஆதிபத்திய நல்லூரை ஆண்ட சாத்தந்தை குலத் தலைவன் சரவணன் மற்றும் செம்பகுலத் தலைவன் தம்பணன் ஆகியோர்களை துணைக்கு அழைத்துக் கொண்டு கொங்கு நாடு நோக்கிப் பறந்தான்.

போர்ப்பறை முழங்க கொங்கு நாட்டை நோக்கிப் புறப்பட்ட வேளாளப் படைகள் நாட்டின் நுழைவுவாயிலை அடைந்து முகாமிட்டு போர் முறைகளைப் பற்றி கலந்து பேசி நாற்புறத் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள்.

கோவிலூர் அரசன் குழையர் குல வேள் குமார ரத்தின மால் இலவந்திக் கோட்டைப் பகுதியிலிருந்த மாவலர் காவலர் வேட்டுவர்களை விரட்டியடித்து கோட்டையைக் கைப்பற்றினான்.


வெற்றி விழாவில் பங்கு கொள்ள கொங்கு நாடு வந்த சோழன் ஒதாளன, பொன்னர், சாத்தந்தை, குழாயர், செம்பர் ஆகிய ஐம் பெரும் வேளர்களுக்கு அவர்களின் வீரத்தையும், தீரத்தையும் பாராட்டி மன்றாடி என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தான் சேர மன்னன். வேளிர் ஐவரும் வென்ற நாடுகளை அவர்களுக்கே இனாமாக அளித்தான். இதனால், 'தேவ மன்றாடி' பட்டமும் புத்தரசன் கோட்டைக்கு அரசுரிமையும் பெற்றனர் குழாய குலத்தினர்.

இக்குழாய குலத்தினரின் கீர்த்தியை ஒதாளர் அலகுமலைக் குறவஞ்சி இவ்வாறு போற்றிச் சிறப்பிக்கின்றது.

"புத்தரசை என்னும் புகழ்மிகுங் கோட்டையில்
இத்தலம் மதிக்கும் ஏந்தலாம் - என்றும்
கோயிலூர் குழையர் குமார ரத்தினமால்
மாவலர், வேடர், வேட்டுவர் குறும்பை அடக்கி
புத்தரசை என்னும் புரியுள கோட்டையில்
முறுக்கி ஆதிக்கம் படைக்கவே ஆண்மை
திடத்துடன் படையைச் செலுத்தினான்
....... ...... .......
குழாயன் குமார ரத்தினமால்
கோமகன் தனக்கு
போக தேவேந்திரன் போலவே நன்றாய்
மாகன மன்றாடி பட்டமும்"

கொடுவாய்ப் பகுதிக்கு மன்னனான பெரிய பெருமாள் தனது மூத்த மகன் குமாரசாமிக்கு புத்தரசைக் கோட்டை குழையர் குல வேள் குமார ரத்தினமால் மகளை திருமணம் செய்வித்து தனது ஆதிக்கத்திற்குட்பட்ட அவிநாசி பாளையம், கண்டியன் கோவில், நிழலி, காட்டூர் ஆகிய பகுதிகளை ஒப்படைத்தான்.

பொங்கலூர் நாட்டிலே புத்தரன் கோட்டையைக் கைப்பற்றி அரசாட்சி புரிந்த குழாய குலத்தினர் காம்பிலி அம்மனையும் அங்கியம்மனையும் குலதெய்வமாக்கிக் கொண்டு கோயில்கள் கட்டி திருப்பணி புரிந்துள்ளனர். காணியாளக் கவுண்டர்கள் என்ற சிறப்புப் பெயருடன் சிற்றரசர்களாய் படைத்தளபதிகளாய் புகழ் ஏந்தி வாழ்ந்துள்ளனர். வேள ராசி குழாயர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற இவர்களின் பழம்பெருமைகளை கொடுவாய் வட்டாரத்திலே காணப்படும் கல்வெட்டுக்கள் போற்றிப் புகழ்கின்றன.




அருள்மிகு பொன்குழலி அம்மன்

